# சுனாமியின் 'பசி'

108

பாபநாசம் குறள்பித்தன்



# சுனாமியின் 'பசி'


## (சிறுகதைகள்)

தமிழக அரசின் விருதுபெற்ற எழுத்தாளர்


## பாபநாசம் குறள்பித்தன்

வெளியீடு:
அமைதி அறக்கட்டளை
காவலர் குடியிருப்பு அருகில்,
திருச்சி சாலை, திண்டுக்கல் 624 005
தொ.பேசி: 95451 2420021
தொ.நகல்: 95451 2410372
இ மெயில் : peacetrust@vsnl.com
இணையம் : www.peacetrust.org.in

| | |
|---|---|
| நூலின் பெயர் | : **சுனாமியின் 'பசி'** |
| நூலாசிரியர் | : **பாபநாசம் குறள்பித்தன்** |
| நூலின் வகை | : சிறுகதைகள் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| வெளியிட்ட ஆண்டு | : உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அமைதி அறக்கட்டளையால் மார்ச் 8,2005ல் வெளியிடப்பட்டது |
| வெளியிடுவோர் | : **அமைதி அறக்கட்டளை** காவலர் குடியிருப்பு அருகில், திருச்சி சாலை, திண்டுக்கல்- 624 005 |
| மொழி | : தமிழ் |
| விலை | : ரூ35/- |
| நூல் அளவு | : கிரவுன் |
| பக்கம் | : 96 |
| எழுத்து | : 12. புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| அச்சிட்டோர் | : குணசேகர் ஆப்செட், சென்னை - 26. |
| விற்பனைக்கு | : **நியு - எட் பப்ளிகேசன்ஸ்** H 2/30, இராணி மங்கம்மாள் காலனி, திண்டுக்கல் - 624 001. தொ.பேசி: 95451 2461512 e mail: puthiyakalvi@hotmail.com web: www.pasumaiulagam.com |



சுனாமியின்
கோரப்பசிக்கு
இரையாகிப் போய்
எல்லாமும் இழந்து
தவிப்போர்க்கு
மதங்களைக் கடந்து
மொழிகளைக் கடந்து
நாடுகளைக் கடந்து
உதவிக் கரம் நீட்டிய
ஈர இதயங்களுக்கெல்லாம்
இந்நூல்....



## என் கண்ணீரும் இரணமும்...

சுனாமி...

பேரலையின் பெருமூச்சு...

அது தொட்ட வடு

அது நாடுகளில் ஏற்படுத்திய

மடு- கொஞ்சமா, நஞ்சமா?...

தொலைக்காட்சிகளில் -

வானொலிகளில் -

செய்தித் தாள்களில் -

கண்ட காட்சிகள், கேட்ட செய்திகள் -

உலகோர் கண்களை ஈரமாக்கின...

இதயத்தை இரணமாக்கின...

அதில் நானும் ஒருவன்...

அதனால்

என் கண்ணீரும் இரணமும் சேர்ந்தது!..

துடித்தது இதயம்!

அதை

என் பேனா இங்கே கதைகளாக வடித்திருக்கிறது.

அதுவே உண்மை!

இந்த உண்மைகள், உங்களின் கரங்களைத் தொட மனித நேயத்தோடு காரணமாக இருந்தவர், திண்டுக்கல் அமைதி அறக்கட்டளையின் தலைவர் திருமிகு. பால்பாஸ்கர் அவர்களே.!

அவரது தொண்டு இதயத்திற்கு என் நன்றியும் வணக்கமும்.

இந்நூலிற்கான பணியில் நான் ஈடுபட்ட போது, என்னோடு துணை நின்ற நண்பர்கள் திரு. வை. அருணாசாலம், திரு மதி அவர்களுக்கு நன்றி.

எப்பொழுதும்போல், என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார், நீலா கண்ணன் அவர்களுக்கு வணக்கமும், வாழ்த்தும்.

**நட்புடன்**

**குறள்பித்தன்**

முகவரி:
***பாபநாசம் குறள்பித்தன்,***
***16/52, பக்தவத்சலம் காலனி முதல் தெரு,***
***வடபழனி, சென்னை 600 026.***
***போன்: 24814746 (பி.பி).***

# பதிப்புரை

**சு**னாமி பேரலையின் அழிவிலிருந்து இன்னும் மக்கள் முன் நிலையை அடையவில்லை. அப்படி அடைய இன்னும் சில ஆண்டுகள் ஆகும்.

இப்படி நான் கூறக் காரணம்-

எமது அறக்கட்டளையின் சார்பிலே தொண்டர்களோடு சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாங்கண்ணி, வேதாரண்யம், சிக்கல், நாகூர் இன்னும் பல்வேறு இடங்களுக்குச் சென்று உடனடி நிவாரணப் பணிகளைச் செய்த போது கண்டறிந்த உண்மைகளே இவை.

சுனாமியின் பாதிப்பு உங்களைப் போல் எனக்குள்ளும் வலி கொடுத்தது.

இந்தப் பாதிப்பை, வலியை எந்த நிலையிலாவது பதிவு செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அப்படி நினைத்ததை எனது நீண்டகால நண்பரும் பத்திரிகையாளும் எழுத்தாளருமான திரு. பாபநாசம் குறள்பித்தன் அவர்களிடம் கூறினேன். அவரும் உடனே எட்டுக் கதைகளை எழுதித் தர அதை அப்படியே வாசகர்களாகிய உங்களுக்குத் தந்திருக்கிறேன்.

இதில் உள்ள கதைகள், சிலருக்கு கண்ணீரை வெளிப்படுத்தும். சிலருக்கு இதயத்தை இடம்பெயர்த்துப் போடும். பலருக்கு அன்பையும் நட்பையும் பண்பையும் நம்பிக்கையையும் உள்ளத்தில் நட்டுவைக்கும் என்று நம்புகிறேன்.

இனிய வணக்கங்களுடன்,

தலைவர், அமைதி அறக்கட்டளை.

# குழந்தை உரிமைகளைக் காக்க சுனாமி பேரழிவை எதிர்கொண்ட அமைதி அறக்கட்டளை



**ஜே. பால்பாஸ்கர்,**

தலைவர், அமைதி அறக்கட்டளை.

அமைதி அறக்கட்டளையானது 1984ஆம் ஆண்டு முதல், திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தமிழகம் முழுவதும், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரம், கிராமப் பெண்கள் மேம்பாடு, குடிபெயர் தொழிலாளர் நலன், சுற்றுச்சுழல் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நலன் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிறுவனமானது ஐ.நா. சபையின்

பொருளாதாரம், சமூக மற்றும் கலை அமைப்பில் ஆலோசனை உறுப்பினராகவும் உள்ளது. சர்வதேச அமைப்புகளுடன் பல்வேறு உரிமைகளுக்காக வாதாடி வருகிறது.

கடந்த 22 ஆண்டுகளாக குழந்தை உரிமைகள், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற செயல்பாடுகளில் இந்நிறுவனம் செயல்படுகிறது.

இந்நிறுவனத்தில் சுமார் 54 முழு நேரப் பணியாளர்களும் 5,740 தன்னார்வத் தொண்டர்களும் பணியாற்றி வருகின்றனர்.

சென்னை, திண்டுக்கல், கரூர், ஈரோடு, கோவை மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் அவர்களின் மறுவாழ்வு, மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு தொழிற்பயிற்சி, குடிபெயர் தொழிலாளர் நலன், கொத்தடிமை முறை ஒழிப்பு, நீர் சேகரிப்பு போன்ற திட்டங்களை எண்ணற்ற மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறது.

அமைதி அறக்கட்டளையானது கடந்த 1984ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதார மற்றும் மனித உரிமை அமைப்பான (FIA- FOOD- First Information and Action Network), ஃபியான் விருது, 1995 ஆம் ஆண்டிஒல் ஐ.நா. சபை நண்பர்கள் விருது (Friends of United Nations Awards), 2000 ஆம் ஆண்டில் பாடிசாப்பின் சர்வதேச மனித உரிமை விருது (Body-

Shop international human rights Award) போன்ற விருதுகளைப் பெற்றுள்ளது.

மேலும், மாநில அரசு, பத்திரிகை அமைப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் இந்தியாவின் முக்கிய பிரதிநிதிகளிடமிருந்து பல்வேறு பரிசுகளையும் பெற்றுள்ளது.

குழந்தைத் தொழில் முறைக்கெதிரான உலக பயணத்தின் இந்திய தேசிய ஒருங்கி ணைப்பாளராகவும், ஆசிய குழந்தைத் தொழிலாளர் கூட்டமைப்பில் உறுப்பினராகவும் இருந்து வருகிறது.

தற்போது, அமைதி அறக்கட்டளையானது நாகப்பட்டிணம் மற்றும் சென்னையில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

கிருஸ்துமஸ் விழா மற்றும் அரையாண்டு தேர்வு விடுமுறை என்பதால் சிறுவர்கள் வீட்டிலேயும் கடற்கரை மணலிலும் விளையாடிக் கொண்டிருந்த 26/12/2004 அன்று இந்தோனேஷியாவை மையமாகக் கொண்டு புறப்பட்ட சுனாமி பேரலையானது அதே நாள் காலையில் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை யோரங்களைத் தாக்கி பல்லாயிரக் கணக்கான உயிர்களை அடித்துச் சென்றுவிட்டது.

இக்கோரச் சம்பவத்தால்... உயிர் மற்றும்

உடமைகளை இழந்த குடும்பங்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்கும் பொருட்டு என் தலைமையில் சுமார் 21 பணியாளர்கள் கொண்ட அமைதி அறக்கட்டளையின் நிவாரணக் குழு புத்தாண்டு தினமான 1/1/2005 அன்று நாகப்பட்டிணம் மாவட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட சிக்கல், வேதாரண்யம் ஆகிய தாலுகாவிற்குட்பட்ட கடலோரக் கிராமங்களையும், அப்பகுதியிலிருந்து தப்பியோடிய மக்கள் தங்கியிருந்த முகாம்களுக்குச் சென்று ஆறுதல் அளித்தது.

நிவாரணக்குழு சிக்கல் மற்றும் வெள்ளைப் பள்ளம் ஆகிய இரு முகாம்களில் தங்கியிருந்த மக்களிடம், அவர்கள்தம் பிரச்சனைகளைக் கேட்டறிந்து போதிய உணவு, குடிநீர், சுகாதார வசதி மற்றும் குழந்தைகளுக்கான வசதிகள் -குறிப்பாக கல்வி மற்றும் தங்குமிடம் போன்றவைகள் பிரதான பிரச்சனையாக கண்டறியப்பட்டது.

**அமைதி அறக்கட்டளைக் குழுவினர் கண்டறிந்த சில உண்மைகள்:**

அமைதி அறக்கட்டளையானது 1.1.2005 அன்று சிக்கல் மற்றும் வெள்ளப்பள்ளம் ஆகிய இரு முகாம்களில் தங்கியிருந்த மக்களைச் சந்தித்து விவாதம் நடத்தியதில் கீழ்க்கண்ட உண்மைகள் கண்டறியப்பட்டன.

★ நாகப்பட்டிணம் மாவட்டத்தில் மட்டும்

13,000 பேர் இறந்திருக்கக் கூடும்.

★ இறந்தவர்களில் 37 முதல் 39 சதவிகிதத்தினர் குழந்தைகளே. கடற்கரை யோரங்களில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் பெரும்பாலானோர் இறந்துவிட்டனர்.

★ சுனாமி பேரலை மீண்டும் தாக்கக் கூடும் என்ற அச்சத்தில், அப்பகுதி மக்கள் இறந்து கிடக்கும் சடலங்களை கரையோரங்களிலிருந்து மீட்க முன்வரவில்லை.

★வேளாங்கண்ணி புனித ஸ்தலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள, மீனவர் காலனி மற்றும் தெருக்கடைகள் சுனாமி அலையால் காணாமல் போய்விட்டன.

★நாகூர், வேளாங்கண்ணி, வேதாரண்யம் மற்றும் பூம்புகார் ஆகிய பகுதிகளைக் கடுமையாகத் தாக்கியுள்ளது.

★அதிகப்படியான படகுகள் பேரலையால் அடித்து இழுத்துச் செல்லப்பட்டன. அதே சமயம் சில படகுகள் உடைந்து சிதைந்த நிலையில் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

★பெரும்பாலான கிராம மக்கள், யார் யாரை இழந்துள்ளனர் என்பதே தெரியாமல் திக்கு திகைத்தனர்.

★பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதிய குடிநீர் உணவு மற்றும் இருப்பிடம் ஆகியவை யில்லாமல் தவித்தனர்.

★முகாமில் தங்கியிருந்த அக்கரைப் பேட்டை, பிச்சாங்குப்பம் மற்றும் வெள்ளப்பள்ளம் கிராம மக்கள் தங்கள் வாழ்க்கை சாதாரண நிலைக்கு திரும்ப இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தேவைப்படும் என குறிப்பிட்டனர்.

★படகுகள் மற்றும் வலைகள் வாங்குவதற்காக மீனவர்கள் அப்பகுதி 'கெந்து' வட்டிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கியுள்ளனர். தற்போது, அவைகள் அனைத்தும் சுனாமியால் அடித்துக் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டன. ஆனால், அவர்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதை நினைத்துப் புலம்புகின்றனர். இது தவிர, அமைதி அறக்கட்டளையின் சென்னை கிளை அலுவலகத்திலிருந்து சுமார் 10 பேர் கொண்ட குழுவினர், பாதிக்கப்பட்ட சென்னை கடற்கரை குடிசைப் பகுதிகளுக்கு விரைந்து சென்று தேவையான நிவாரணப் பணிகளை மேற் கொண்டனர்.

## உடனடி நிவாரணப் பணிகள்:

சுனாமியின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளையும், சேதங்களையும் கணக்கில் கொண்டு, அமைதி அறக்கட்டளையானது தனது நிவாரணப் பணியை சிக்கல் மற்றும்

வேதாரண்யம் ஆகிய பகுதிகளில் 1.1.2005 அன்று தொடங்கியது.

உடனடி நிவாரணப் பணியாக இந்நிறுவனம் மேற்கொண்ட செயல்பாடுகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது;

மருந்துவகைகள், பாய், போர்வை, குளியல் சோப் மற்றும் இதர உணவுப் பொருட்கள் போன்றவைகளை நாகை மாவட்டம் சிக்கல் மற்றும் வெள்ளப் பள்ளம் ஆகிய இரு முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு வழங்கப்பட்டன.

சென்னை மெரினா கடற்கரைக்கு அருகாமையில் உள்ள சீனிவாசபுரம் மற்றும் நொச்சிக் குப்பம் ஆகிய பகுதிகள் மேற்கண்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நாகப்பட்டிணம் மற்றும் சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் கணக்கெடுப்பு, அவர்களின் பிரச்சனைகளின் தன்மைக்கேற்ப உடனடி சேவைகள், அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களிலேயே ஆறுதல் மற்றும் தைரியம் வளர்த்தல் போன்றவைகளை மேற்கொள் ளப்பட்டது.

**அமைதி அறக்கட்டளையின் நீண்டகால யோசனைகள்:**

-சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது ஒரு நீண்டகால

செயல்பாடு ஆகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று வீடு கட்டித் தருவது, பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதர வசதிகளை ஏற்படுத்துவது, கல்வியை வழங்குவது போன்றவை இந்நிறுவனத்தின் நீண்ட கால யோசனையாகும். அவைகளுள் முக்கியமானவை:

-நாகப்பட்டிணம், சென்னை கடலோர கிராமங்களில் சுனாமி தாக்குதலால் அனாதை யாக்கப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுப்பது மற்றும் அவர்களுக்கு நிரந்தர, முறையான விடுதி வசதியுடன் கூடிய கல்வி வழங்குவது.

-பாதிக்கப்பட்ட பகுதியில் குழந்தைகளுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்துவது.

-பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மகிழ்ச்சி கரமான சூழ்நிலைக்குத் திரும்பும் வகையில் அவர்களுக்குப் போதிய ஆலோசனைகளும் ஊக்கமும் வழங்குவது.

-அன்றாட அடிப்படை தேவைகள்/ பொருட்கள்குழந்தைகளுக்கு வழங்குதல்.

-விளையாட்டு மைதானம்/சிறுவர் பூங்கா அமைத்தல்

-சிறுவர்களுக்கு கடல் அரிப்பைத் தடுத்தல் மற்றும் கடற்கரை பாதுகாப்பு குறித்த பயிற்சி அளித்தல்

-கடற்கரையோரங்களில் 'அலையாத்தி' போன்ற மரங்களை நடுவது மற்றும் கடற்கரைச்

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் சிறுவர்களை பங்கேற்கச் செய்தல்.


மேற்கண்ட செயல்கள் தவிர பள்ளியைவிட்டு நின்ற அனைத்து சிறார்களையும் மீண்டும் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தல், சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வாழும் அனைத்து குழந்தைகளையும் ஒன்று திரட்டி அவர்கள் தம் உரிமைகளைப் பெற, அவர்களுக்குத் தேவையான விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் அமைதி அறக்கட்டளை, நாகப்பட்டிணம் மற்றும் சென்னை பகுதிகளில் நடத்தி வருகிறது.

நாகை மாவட்டத்தின் ஓரிரு கிராமங்களில் நிரந்தரமானபாதுகாப்பான வீடுகளை/காலனிகளை அமைக்கும் முயற்சியில் அமைதி அறக்கட்டளை ஈடுபட்டு வருகிறது.

சுனாமியை தீரமுடன் எதிர்கொண்ட தொண்டு நிறுவனங்களில் அமைதி அறக் கட்டளையும் முதன்மை வகிக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1) பசி | 19 |
| 2) தாய்மை | 26 |
| 3) புது உறவு பூத்தது | 36 |
| 4) கமலா...கமலா... | 50 |
| 5) வேரும் விழுதும் | 54 |
| 6) கடைசி ஆசை | 62 |
| 7) மகனே!வந்துட்டியா... | 65 |
| 8) சுனாமி நிச்சயித்த... | 83 |



# பசி



''அண்ணாச்சி, பிள்ளை அழுவுது ஒரு பால் பாக் கெட்டு கொடுங்க... எங்க வீட்டுக் காரர் கரைக்கு வந்ததும் தந்துடுறேன்.''

''இதோ பாரு, கடன் மட்டும் வேணாம், போயிடு.''

''நான் எப்ப கடன் கேட்டு இருக்கேன்?-ரெண்டு நாளா கடலுக்குப் போகல...அதனால்தான் இன்னைக்கு கேக்குறேன்...கொடுங்க.'' பசியோடு அழுதுகொண்டு இருந்த குழந்தையை, இடுப்பில் வைத்துக் கொண்டு கேட்டாள், காத்தாயி.

''இந்த அண்ணாச்சி ஒரு தடவைதான்-சொல்லுவான்...கையிலே காசி இல்லேன்னா, ஏன் பால் கொடுக்கணுமுன்னு நினைக்கிறே?.. வடிச்ச கஞ்சியை ஊத்த வேண்டியதுதானே...

''அண்ணாச்சி நாக்கை அடக்கி வச்சுப் பேசுங்க.''

''என்ன காத்தாயி இந்த நேரத்திலே

வந்திருக்க...? என்னவோ கோவமா பேசுன போல இருக்கே'' அங்கே வந்த குப்பத்துல ஆப்பம் விக்கிற அலமேலு பாட்டி கேட்டார்.

''குழந்தைக்குப் பால் வாங்க வந்தேன்''

''வாங்கிட்டியா.'' கேட்டாள், பாட்டி.

''இல்ல.''

''கடையிலே இல்லியா'' மீண்டும் கேட்டாள் பாட்டி.

''இருக்கு...காசு இல்ல...அதான் ஏதோ பேசுறாரு.''

''யோய், என்ன பேசுனே''

''என்ன பேசினேன்...எங்க வீட்டுக்காரர் கடலுக்குப் போய் இருக்கார். காசு இல்ல, கடனா கொடு, வந்ததும் தர்றேன்னா, நான் எப்படி தர முடியும்?..அதான். கஞ்சி தண்ணியை ஊத்துன்னு சொன்னேன்...அது தப்பா?''

''தப்புதான்யா...நீ குடும்பத்துக்காரனா இருந்தா தெரியும்.? நீ கல்யாணம், கருமாதி செய்திருந்தா உனக்குப் புரியும்?...ஊருல நீ என்ன பண்ணிட்டு ஓடி வந்தியோ...இங்க வந்து நல்லா பொழைக்கிறே?... உனக்குப் பாசம் தெரியுமா? பசி புரியுமா?குழந்தை தெரியுமா?...உனக்குத் தெரிஞ்சது எல்லாம்...பணம் மட்டும் தானே'' என்று கை நீட்டி கோபத்தோடு பேசினாள், பாட்டி.

''ஏய் ஆப்பம், நீ சொன்ன எதுவும் எனக்கு வேண்டியது இல்ல..உனக்கு என்ன வேணுடுமோ

அதை வாங்கிட்டுப் போ.''

''இந்தா பத்து ரூபாய், முதல்ல அந்தப் பிள்ளைக்கு பாலைக் கொடுத்து அனுப்பு...எனக்கு வேண்டியதை அப்புறம் கொடுக்கலாம்...நீ வாங்கிக்கம்மா.'' என்றாள் பாட்டி.

''வேணாம்மா...அவுங்க வர்ற நேரமாச்சி.. அப்புறம் வந்து காசு கொடுத்து வாங்கிக்கிறேன்..'' என்றாள், காத்தாயி.

''அட நீ ஒண்ணும்மா...அதை அப்புறம் பார்த்துக்கலாம். முதல்ல பாலை வாங்கிட்டுப் போய் குழந்தைக்குக் கொடு''

''சரி பாட்டி.'' என்று பாலை வாங்கிக் கொண்டு அங்கிருந்து நடந்தாள், காத்தாயி.

அந்தக் குப்பத்துக்கு அண்ணாச்சி வந்தது சுண்டல் வியாபாரியாகத்தான்.

அது கூட ஓர் இடத்தில் ஒண்டிக் கொண்டு அங்கிருந்து செய்து வந்து இங்கு கொண்டு வந்து வியாபாரம் செய்ததுதான்.


இரண்டு ஆண்டில் இப்போது இருநூறு குடிசைகள் உள்ள அந்தக் குப்பத்தில் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டு, அங்கேயே தங்கி, மளிகைக் கடையைப் போட்டுவிட்டார்.

வேறு மளிகைக் கடைகள் அங்கு ஏதும் இல்லாததால், அண்ணாச்சிக் காட்டில் தினமும் பண மழைதான்.

கடைக்குள்ளேயே ஸ்டவ்வை வைத்துப்

பொங்குவார், தின்பார், படுப்பார். உறவு என்று சொல்லிக் கொள்ள ஒருவருமில்லை. பணத்தைத் தவிர யாரையும் நம்பமாட்டார். அவர் ஒரு தனிக்கட்டை, தனிப் பிறவி.

*அ*ன்று காலை...



அந்தக் குப்பமே குய்யோ முறையோ என்று கூக்குரல் எழுப்பிக் கொண்டு குடிசையில் இருந்து வெளிப்பட்டது.

என்றும் இல்லாது அன்று ஆழ்கடல் சீறி வருவதைக் கண்டு, மீனவர்களே - கடலுக்குப் போகின்றவர்களே மலைத்துப் போனார்கள்.

முதலில் குடிசைகளைத் தொட்ட பெரும் அலைகள், படிப்படியாக குடிசைகளையே அசைத்து அலைக்கரம் நீட்டி, கடலுக்குள் இழுத்துப் போய்க் கொண்டு இருந்ததைக் கண்டு, அங்கிருந்தவர்கள் பயந்து நடுங்கத் தொடங்கிவிட்டார்கள். பெண்களும் குழந்தைகளும் கதறத் தொடங்கிவிட்டார்கள்.

''ஏதோ தப்பு நடந்திருக்கு, அதான் கடல் அம்மா இப்படி கோபமா பொங்கி எழறா...இனியும் இங்கிருந்தா அவ்வளவுதான்...கைக்கு கிடைச்சதை எடுத்துக்கிட்டு எல்லாம் ஓடுங்க..ஓடுங்கன்னு'' என்று ஒரு பெரிசு சத்தம் போட்டு கத்தியது.

அப்படியே குடிசைகளில் இருந்து கைக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டு, பெண்டு பிள்ளைகளைப் பிடித்துக் கொண்டு கும்பல் கும்புலாக வெளி ஏறிக்கொண்டிருந்தார்கள், அந்தக் குப்பத்து மக்கள்.

சுனாமியால், இரண்டு மணிநேரத்தில் அந்தக் குப்பம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

அங்கிருந்தவர்கள் எல்லாம், இப்போது ஒரு பள்ளிக் கூடத்தில் தஞ்சமடைந்திருந்தார்கள்.

பொருளை இழந்த, வீட்டைப் பிரிந்த, உறவை இழந்த மனிதர்கள், அங்கே இன்னும் மரண பயத்தோடு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து கலங்கிக் கொண்டு அமர்ந்து இருந்தார்கள்.

அங்கே இருந்த மக்களுக்கு உதவி செய்ய கருணை உள்ளத்தோடு, மனித நேயத்தோடு பலர் உதவிட முன்வந்து, அவர்களின் பசியைப் போக்கிக் கொண்டு இருந்தார்கள்.

எல்லோரும், பள்ளியின் முன்னே இருந்து கொடுத்துக் கொண்டு இருந்த சோற்றுப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு, பள்ளியினுள் சென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சிலர் தங்களது இழப்புகளை எண்ணி கலக்கத்தோடும், கவலையோடும் சாப்பாட்டை கையில் வைத்து குலுங்கி அழுது கொண்டிருந் தார்கள்.

ஆனால், ஒருவர் மட்டும் விரக்தியோடு ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்.

களைப்பும், கவலையும் அவருள் மிகுதியாக அலை அலையாய் எழுந்து புரண்டு கொண்டிருந்தது.

பசி, அவரின் வயிற்றைப் பிசைந்து கொண்டிருந்தது.

பள்ளியின் கூரையையே வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தார்.

சோற்றுப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு பள்ளியினுள்ளே நுழைந்த அந்தப் பெண்ணின்

*கண்ணில் அவர் பட்டார்.*

*அவரை நோக்கி நடந்தாள்.*

*அவர் காலையில இருந்து பட்டினியோடு இருந்ததைப் பார்த்திருந்த அவள் ''இதையாவது சாப் பிடுங்க'' என்று அன்போடு கொடுத்தாள்.*

*அவளை, அவர் ஏறிட்டுப் பார்த்தார்.*

*''பசியோடு இருக்காதீங்க...சாப்பிடுங்க அண்ணாச்சி.''*

*அவரிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்து விட்டு காத்தாயி இடுப்பில் குழந்தையோடு நடந்து கொண்டு இருந்தாள்.*

*இடுப்பில் இருந்த குழந்தை அண் ணாச்சியைப் பார்த்து சிரித்தது.*

*அதைப் பார்த்த அண்ணாச்சியின் கண் களிலிருந்து கண்ணீர் கசிந்தது.*

---

# தாய்மை



காலை நேரம்..மணி ஐந்திருக்கும். அங்கே மேட்டுப் பகுதியில் இருந்த டீ கடையில் வழக்கம் போல் கூட்டம் அதிகம் இருந்தது.

சிலர் டீயை சுவைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிலர் பீடியை இழுத்துப் புகைத்துக் கொண்டிருந்தார்கள்.

''கண்ணுசாமி, ஒரு பீடி கொடு.'' என்று உரிமையோடு கேட்டான், காத்தமுத்து.

''டீ குடிக்கலியா..'' கேட்டான், கண்ணுச் சாமி.

''குடிக்கணும்.''

''சரி கிருஷ்ண அண்ணே, இன்னொரு டீ சேத்துப் போடு.'' என்றான்.

''உன் சோலியைப் பாரு...ஏற்கனவே இருபத்தி இரண்டு ரூபாய் பாக்கி.''

''ஆமாம் பொல்லாத ரூபாய். டீயைப் போடுங்க.'' என்றான், மிடுக்கோடு.

''நான் இப்படி போட்டுக் கொடுத்துக் கொண்டு இருந்தா, தலையில துண்டைப் போட்டுக்

கிட்டுப் போகவேண்டியதுதான்'' என்று சலித்துக் கொண்டார், கிருஷ்ணன்.

''எல்லாரும் போகும்போது அப்படித்தான் போவோம். நீ டீயைப் போடு.''

இதற்கு மேலும்...பேச்சுக்கொடுத்தால், கண்ணுசாமி ஒரு மாதிரி என்பது கிருஷ்ணனுக்குத் தெரியும்.

''ம்...போடுறேன். சாயங்காலத்துக்கு கணக்கை முடிச்சிடு.''

''ஆமாம். பெரிய பொல்லாத கணக்கு... இன்னைக்கு கடல்ல வலையை வீசி, உன் காசை வீசிடமாட்டேன்.'' என்றான்.

இருவருக்கும் டீ வந்தது.

இங்கே கடை போட்ட புதுசுலே கிருஷ்ணன் ஒழுங்கா இருந்தார்...கொஞ்சம் துட்டு சேர்ந்து போச்சுல்ல..அதான் அலட்சியமா பேசுது, என்றான், கண்ணுச்சாமி.

''அதெல்லாம் நாம சொல்லக் கூடாது...வரவு செலவுன்னா அப்படித்தான் இருக்கும்; போகட்டும், நேத்து வலை வாங்கப் போகணுமுன்னு சொன்னியே வாங்கிட்டு வந்துட்டியா'' கேட்டான், காத்தமுத்து.

''தண்டல்காரன் கிட்டேதான் பணம் கேட்டு இருந்தேன். தர்றேன்னு வரச் சொல்லி இருந்தான். நானும் நேத்திப் போனேன். இன்னைக்குப் பணம் வசூல் ஆகலை...ரெண்டு நாள் போகட்டுமுன்னு சொல்லிட்டான்.



சரின்னு..கையில இருந்த காசில ஒரு குவார்ட்டர் ரம்மை வாங்கி அடிச்சுட்டுத் திரும்பிட்டேன்.'' என்றான், கண்ணுசாமி.

''நீ இன்னும் குடிக்கிறதை விடலியா?'' கேட்டான் காத்தமுத்து.

''நான் விட்டுட்டேன்...அதுதான் என்னை விடமாட்டேங்குது.'' என்று வாய்விட்டு வேகமாகச் சிரித்தான், கண்ணுசாமி.

டீக் கடையின் முன்னே இருந்த பானையில்

தண்ணீர் எடுத்துப் பல் தேய்த்துவிட்டு, கடையில் வேலை செய்யும் பையனைப் பார்த்து, ''டே, பொடியா, ரெண்டு வடை எடுத்துட்டு வாடா'' என்று சொல்லி தங்கராஜ் அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்தான்.

வடையை அவனிடம் கொடுத்தபடியே, ''ஏன் அண்ணே, வீட்டுலே இருந்து வரும் போதே பல்லைத் தேய்ச்சுட்டு வரக்கூடாது? எவ்வளவு தூரத்திலே இருந்து நாங்க தண்ணி கொண்டு வர்றோம்'' என்றான்.

''ஏய் பொடியா...இதுக்கு மேலே பேசினே...நாளைக்கு இங்கேயே வந்து குளிப்பேன்..மவனே ஓடி போயிடு.'' என்றான், தங்கராஜ்.

அதுக்கு மேலே அவனிடம் பேச்சுக் கொடுத்தால் முதலாளி திட்டுவார் என்பது பொடியனுக்குத் தெரியும். அதனால் அங்கிருந்து நகர்ந்தான்.

கிழக்கு வெளுத்துச் சிரிக்கத் தொடங்கிய வேளையில்....

ஊர் மக்கள் கடலோரமிருந்து ''ஐயோ... அம்மா..'' என்று அலறிக்கொண்டு ஓடிவருவதைக் கண்டு, டீ கடையில் இருந்தவர்கள் என்னவோ ஏதோவென்று கிழக்கே திரும்பிப் பார்த்தார்கள்.

''என்ன ஆச்சு; ஏன் எல்லாரும் இப்படி வர்றாங்க தெரியலியே...''

''கடலிலே அலை ஒசந்து வர்றதை

பாருங்கப்பா..''

''தெரியலியே''

ஆளு ஆளுக்கு ஒன்றைச் சொன்னார்கள். டீ குடித்தவர்கள், பீடி புகைத்துக்கொண்டிருந்தவர்கள்; வடை இட்லி தின்று கொண்டு இருந்தவர்கள் எல்லாம் அப்படி அப்படியே வைத்துவிட்டு, ஓடி வரும் கூட்டத்தை நோக்கி ஓடினார்கள்.

அதற்குள் குடிசைகளில் தூங்கிக் கொண்டு இருந்தவர்கள் எழுந்தும், வீட்டு வேலை செய்து கொண்டு இருந்தவர்கள் அதை விட்டும், படுக்கையை விட்டு எழுந்திருந்தவர்கள் மற்றவர்களை அழைத்துக்கொண்டும் பரபரப்போடு கடலைத் திரும்பிப் பார்த்தபடியே ஓடி வந்து கொண்டு இருந்தார்கள்.

தாறுமாறான உடைகள், தடுமாறிய நடைகள், அடித்துப் பிடித்து குழந்தை குட்டிகளோடு ஓடி வந்து கொண்டு இருந்தார்கள். எதிர்ப்பட்டவர்கள் கேட்டார்கள்...

''கடல் பொங்கி வருது; திரும்பி ஓடுங்க'' என்று சொல்லிக் கொண்டே ஓடிக் கொண்டு இருந்தார்கள்.

அதைக் கேட்டவர்கள்...

''ஐயோ...என் பொண்டாட்டி என்ன ஆனாளோ...''

''வீட்டுலே போய் பாரு தூங்கிக் கிட்டு இருக்கப் போறா.''

''அஞ்சலை நம்ம குழந்தைங்க எங்கே''

''பெரிய பையன் தூக்கிக் கிட்டு முன்னே போய்ட்டான்...சரி நீங்க போங்க.''

''சட்டையிலே இன்னைக்கு கட்ட வேண்டிய கெந்து வட்டி சீட்டுப் பணம் வச்சி இருக்கேன், ஓடி போய் எடுத்துக்கிட்டு வந்துடுறேன்..''என்றான்.

''சீட்டுப் பணமாவது...காட்டுப் பணமாவது... ஒண்ணாவது...ஒண்ணும் எடுக்க வேணாம்யா... கிழக்கப் பாரு..அலை பலமா வீசுது...என்னோட நீயும் வந்துருய்யா.''

கிழக்கே திரும்பிப் பார்த்தவன்

''சரி புள்ள நீ ஓடு...நான் பின்னாடியே வந்துடுறேன்.''என்றான்.

''ஏய் காத்தமுத்து உடம்பு முடியாம படுக்கையிலே கிடந்த உன் அப்பா, எங்கே?.''

''என் பையனுங்க ரெண்டு பேரையும் தூக்கிக் கிட்டு வரச் சொல்லியிருக்கேன்...தூக்கிக் கிட்டு வருவானுங்க.''

''சரி நான் பார்த்துட்டு வர்றேன்...நீ உன் பிள்ளைங்களை அழைச்சுகிட்டு வேகமாகப் போ.''

''நீ போய் அவரைப் பார்க்க வேணாம். அவரைத் தூக்கிக் கிட்டு பிள்ளைங்க வந்துடுவானுங்க...நீ அங்கே போக வேணாம். நிலைமை மோசமாயிடும் போல இருக்கு...வா போயிடுலாம்''

''அதை நான் பாத்துக்கிறேன். நீ

மூட்டையைத் தூக்கிக்கிட்டுப் போ.'' என்று சொல்லிவிட்டு, இன்னும் குடிசைப் பக்கம் யாராவது இருக்கிறார்கள் என்று பார்க்கப் ஓடினான்.

நன்றாகப் பொழுது புலர்ந்துவிட்டது.

இதற்கு இடையில் குப்பத்து மக்களில் பாதிபேர்... கரைக்கும்..சிலர் கடலுக்குள்ளும் போயிருந்தார்கள்.

''என் அம்மாவைக் காணலியே.''

''என் சின்ன மகனைப் பார்த்தீங்களா''

''எங்க அப்பா எங்கே போனாருன்னு தெரியலியே.''

இப்படி பல குரல்கள் அவலமாய் ஒலித்தன.

கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு பரபரப்பாக குடிசையில் இருந்து வேலம்மாள் கதவைத் திறக்கவும், அங்கு வந்த பேரலை உள்ளே அவளை வைத்தே அடித்து மூடியது...

''ஐயோ என் பிள்ளையைக் காப்பாத் துங்களேன்.'' அவள் குரல் ஓசையை அடக்கிப் போட்டது, அடுத்து வந்த அலை.

கண்ணுசாமி தன் வீட்டிற்கு வருவதற்குள் அலை புகுந்து, வீட்டை மெழுகிக் கொண்டிருந்தது.

திறந்து கிடந்த வீட்டை எட்டிப் பார்த்து ''சாந்தி...சாந்தி.''என்று கத்தத் தொடங்கினான்.

எதிர்குரல் அங்கே இல்லை...

''சாந்தி...சாந்தி.''

தூரத்தில் இருந்து ஒருவர் கை அசைப்பதைப்

பார்த்த கண்ணுசாமியின் காலைச் சுற்றி வந்த அலைகளைத் தாண்டி, ஓடத் தொடங்கினான்.

''சாந்தி...சாந்தி.''

''கைக் குழந்தையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கிட்டு அந்தக் கும்பலுலே உன் பொண் டாட்டிப் போவுது..ஓடு'' என்றான்.

ஓடினான்.

சாந்தி..கூட்டத்தில் பிள்ளையை தோளில் போட்டு, கால் பதியும் மணலில் நடக்க முடியாது நடந்து கொண்டிருந்தாள்.

''சாந்தி.''

''வந்திட்டீங்களா'' ஆவலோடு கேட்டாள்.

திருமணம் நடந்து நான்கு ஆண்டுகளுக்குப் பின் பிறந்த ஆறு மாதக் குழந்தையை நீட்டி இந்தாங்க...நீங்க முன்னே போங்க...நான் பின்னே வந்துடுறேன்...'' என்று பிள்ளையை அவனிடம் கொடுத்தாள்.

அவன் தயங்கி நின்றான்.

''நீங்க போங்க...''

ஏதோ ஒரு நம்பிக்கையில், அவன் குழந்தையோடு ஓடினான்..

சாந்தியோடு வந்தவர்கள் முன்னேறி போய்க் கொண்டு இருந்தார்கள்.

சாந்தி, ஏற்கனவே உடல் சக்தியற்று இருந்ததால், பின்தங்கி நடந்து கொண்டிருந்தாள்.

அவள் கண்ணில் இருந்து கொஞ்சம்

கொஞ்சமாக கணவனும் குழந்தையும் மறைந்து கொண்டு இருந்தார்கள். மிகவும் சோர்ந்து போய் நடந்து கொண்டிருந்தாள்...

அப்போதுதான் அந்த அழுகுரல் கேட்டது...

திரும்பிப் பார்த்தாள்...

அங்கே..பிறந்து கொஞ்சநாளேயான குழந்தை ஒன்று...

தன்னை துரத்தி வரும் அலையை மறந்தாள்...

சூழ்நிலையை மறந்தாள்...

ஒருவரையும் காணவில்லை...

தான் மட்டும் தனித்து நிற்பதை உணர்ந்தாள்..

கிழக்கே...அலைகள் சீறிக்கொண்டு கடலில் இருந்து வந்தன.

கையில் குழந்தையோடு வெறிபிடித்தவளாய் கரையை நோக்கி ஓடினாள்..

அவளுக்கு மூச்சு வாங்கியது...நின்றாள்

கையில் இருந்த குழந்தையைப் பார்த்தாள். பெண் குழந்தை.

குழந்தையின் அழுகுரலோ மேலும் மேலும் கூடிக் கொண்டே போனது. அது எப்போது பால் குடித்ததோ...?

கடலை, திரும்பிப் பார்த்தாள்...

மேட்டு நிலத்தில் அப்படியே அமர்ந்தாள். மாராப்பை விலக்கினாள்...குழந்தையின் அழுகுரல் இப்போது இல்லை.

அவளுள் நிம்மதி நிலவியது.


தன் மனைவி கூட்டத்தோடு சேர்ந்து இன்னும் வரவில்லையே என்ற பதட்டத்தோடு கரையை நோக்கி, குழந்தையோடு வந்த சாந்தியின் கணவன் திரும்பி அவளைத் தேடி வர...

அங்கே ...

தன் மனைவி யார் குழந்தைக்கோ பால் கொடுத்துக் கொண்டு இருப்பதைக் கண்டு, அப்படியே நின்றிருந்தான்...

அங்கே தாய்மை மலர்ந்தது!

—



# புது உறவு பூத்தது!



டி.வியில் பார்த்த காட்சிகள்...

கேட்ட செய்திகள்...

அவன் உள்ளத்தை உலுக்கிப் போட்டது. கண்ணீருக்கு, அவனால் தடை போட முடியவில்லை.

வேலைக்கு விடுப்புப் போட்டான்.

சேமிப்புப் பணத்தை எல்லாம் சூட்கேசில் வைத்துப் பூட்டினான்.

புறப்பட்டு விட்டான்.

திருச்சியிலிருந்து தன் சொந்த ஊருக்கு.

பசியை மறந்தான். பசித்தால் அல்லவா நினைப்பதற்கு..? அந்த உணர்வே இல்லை.

பஸ்ஸில் ஏறியவன் அழுது அழுது வீங்கிய முகத்தோடு ஒரு ஓரமாக அமர்ந்தான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், தன் அப்பாவிடம் சண்டை போட்டுவிட்டு வீட்டை விட்டு வெளியேறியது நினைவில் நிழலாடியது...

''உன் பிள்ளை வந்துட்டானா...? போடு

நல்லா போடு, குழம்பை நிறைய ஊத்து.... காய்கறியை அள்ளி வை... நல்லா மூக்கைப் பிடிக்கத் தின்னுட்டு, ஊர் சுத்தட்டும். தெண்டச் சோறு... தெண்டச் சோறு... இவனோட வயசுலே இருக்கிறவனெல்லாம் அஞ்சு பத்தாவது ஏதோ சம்பாதிக்கிறானுங்க. இவன் என் காசை அழிக்கறதுக்குன்னே பொறந்திருக்கான். ஒரு வேலை தேட துப்பு இல்லை. தின்னுறதைப் பாரு...அவன் தந்தை 'தண்ணி'யோடு தாரளமாகத் தன் இதயச் சுமையை இறக்கி வைத்தார்.

''சாப்பிடும் போதெல்லாம் ஏன் பிள்ளையை இப்படி பேசித் தொலைக்கிறீங்க.? சும்மா இருங்க.'' மகனுக்கு சார்பாய், தாய் எதிர்த்துப் பேசினாள்.

''நான் பேசதாண்டி செய்வேன். என் வேதனை எனக்கு, உன் பாசம் உனக்கு..ம்..சமைத்துக் கொட்டு. இவன் கெட்டுப் போறதுக்கு, நீ தாண்டிக்காரணம். உன்னை உதைச்சா சரியா போயிடும்டி..'' என்று எழ முயன்றவரைப் பார்த்து-

''நீங்க பிள்ளை சாப்பிட்டு முடிச்சதும் என்னை உதைக்கலாம் இப்ப அங்கேயே உட்காருங்க...

இவ்வளவு பேசுறீங்களே, நீங்க பிள்ளைக்கு ஒரு வேலை வாங்கித் தந்தா, அவன் போக மாட்டேன்னா சொல்லுவான்'' என்றாள், தாய்.

''என்னை கிண்டலாடி பண்ணுறே? எனக்கு தெரிஞ்சது எல்லாம்...வலை, கட்டுமரம், கடலு.

வேற என்ன தெரியும்?. நம்ம கோவிந்தன் மகன் இவனோட பத்தாவது தானே படிச்சான்? அவனுக்கு அவன் அப்பனா வேலை வாங்கிக் கொடுத்தான்?...அந்தப் பிள்ளையா, ஒவ்வொரு இடமா அலைஞ்சான்..யார் யாரையோ பிடிச்சான். இன்னைக்கு தஞ்சாவூரிலே ஒரு வேலை பண்ணுறான். அவன் பிள்ளையா? இவன் பிள்ளையா?.....

வெட்கம், மானம், சூடு, சொரணை இருந்தா இனிமே என் சாப்பாட்டை இவன் சாப்பிடக் கூடாது. இவன் எனக்கு ஒருவனுக்குப் பிறந்தவனா இருந்தா.இவன் சாப்பிடுறது இதுவே இங்கே கடைசி சாப்பாடாய் இருக்கனும். அவ்வளவுதான் சொல்வேன்.''

சாப்பிடுவதை நிறுத்திய வரதன் தன் தாயை கண்கலங்கப் பார்த்தான். சாப்பாட்டில் இருந்து எழ முயன்றவனை-

''நீ சாப்பிடுப்பா...சாப்பிடும்போதுதான் இந்த மனுசன் வந்து தன்னோட வீராப்பைக் காட்டுவாரு...அவருக்கு குடி, தலைக்கு ஏறி நிக்குது. அவரு....அப்படித்தான் உளறுவாரு..நீ சாப்பிடுப்பா.'' தாய் கெஞ்சினாள்.

''போதும்மா...போதும். இதுக்கு மேல எதுவும் வேணாம்மா..''

எழுந்து வெளியே போனவன், கையைக் கழுவி விட்டு வீட்டினுள் நுழைந்தான்.

''பாவி மனுசா...இப்படி பிள்ளையை சாப்பிடாம பண்ணிட்டியே.'' என்று கணவரைப் பார்த்துத் திட்டினாள்.

''ஏய்...இவனோட இந்த வீராப்பு வயித்துல இருக்கிற சோறு செரிக்கிற வரைக்கும்தான். நீ கவலைப்படாதடி. ஊரெல்லாம் சுத்துனாலும் தேரு தேரடிக்குத்தான் வரும். நீ கவலைப்படாதடி போ...போ..''

''நீ மனுசனே இல்ல, மிருகம்...மிருகம்.''

''அம்மா நான் போறேன்.''

''எங்கப்பா போறே?.'' கலங்கிக் கேட்டாள் தாய்.

''எங்கேயோ..''

''வரதா...என் கண்ணு...அவரு கிடக்கிறாரு..நீ வாப்பா.'' என்று மகனின் கைப்பிடித்தாள், தாய்.

''எப்படியோ...எங்கேயோ...போகட்டும்டி...ஊருக்கு வரும்போது ஒரு மனுசனா வந்தா போதும்...''

''பெத்த ஒரு பிள்ளைய இப்படிப் பேசுறீயே? நீ எல்லாம் ஒரு மனுசனா?....''வெடித்து நின்றாள் தாய்.

தாயின் கைகளை மெல்ல விடுவித்து, கலகத்தோடு வெளியேறினான், வரதன். அழுதபடியே மகன் செல்வதைப் பார்த்துக் கொண்டு தாய் நின்றிருந்தாள்...

சாலையின் குறுக்கே வந்த ஒரு ஆட்டுக்

குட்டியைக் காப்பாற்ற, பஸ் குலுங்கி நின்றது.

அவனது சிந்தனையும் அறுந்து வீழ்ந்தது....

குமுறும் நெஞ்சோடு பஸ்ஸை விட்டு தன் ஊரில் இறங்கியவன், ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி ஓடினான்....

அவன் பிறந்த கிராமம், வளர்ந்த கிராமம்....

வரதன் இரண்டு ஆண்டுகளுக்கு முன் வேலை கிடைக்காத நிலையில், கடல் வேலையும் தெரியாத சூழ்நிலையில், துள்ளித் திரிந்த அந்தக் கடல் கிராமம் இருந்த கடற்கரையில், அவன் ஓட்டம் வந்து நின்றது.

இங்கிருந்த குடிசைகள் எல்லாம் எங்கே?... அதில் சேர்ந்து மகிழ்ந்து சிரித்திருந்த காலங்கள்...

குடிசைகள் இருந்த சுவடுகள் கூட தெரியாத



நிலையில் அந்த கிராமம்... இன்று விளையாட்டு மைதானம் போல்...

வரதனின் இதயத் துடிப்பு நொடிக்கு நொடி கூடிக் கொண்டு இருந்தது.

மீன் வாடை, பிண வாடை அங்கே வாழ்ந்தவர்கள் உயிர் போகும் நிலையில் இறுதியாக புலம்பிய தவிப்புகள், தத்தளிப்புகள் எல்லாம், அவனையும் அவன் மனதையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வாட்டுவதாக உணர்ந்தான்.

இந்த இடத்தில்தானே....இந்த இடமா? இல்லை அந்த இடமா?...இந்த இடத்தில் யார் வீடு இருந்தது? மணியின் வீடா...? மாணிக்கத்தின் வீடா? இல்லை நம் வீடா?

எதையும் தீர்மானம் செய்ய இயலாத நிலையில், அவன் நின்றிருந்தான்.

கடல் ஓரம் நீண்டு வெறுமையாய் படுத்துக் கிடந்த அந்தப் பாலைப் பகுதியைச் சுற்றி தன் பார்வையை வீசினான்.

அவன் பார்வை மங்கியது. காரணம், விழியில் வெப்ப நீர் எட்டிப்பார்த்ததுதான்.

இமைகளை அழுத்தமாக மூடித் திறந்தான். ஒளி வந்தது.

சுந்தரம், கிருஷ்ணன், மூர்த்தி, மணி, லோகநாதன், மாணிக்கம் எல்லோரும் கூடி கபடி விளையாடிய இடம் எது? அதோ அங்கேதானா? இல்லை, அதற்கும் அப்பாலா?

சின்ன வயதில் அப்பா, முதுகிலும் அம்மா முதுகிலும் உப்பு மூட்டை ஏறி உலா வந்த நம் தாய் மண் இதுதானே...?

இரண்டு நாள், ஒருநாள் என்று அப்பா கடலுக்குள் சென்று வலை மீனோடு மிடுக்காய் நடந்து வந்த மணல்வெளி இதுதானே...?

அப்பாவின் வரவிற்காகவே, தான் அலையோரம் சிறுவயதில் காத்திருந்த அந்தப் பொழுதுகள், இனி மீண்டும் இங்கே வருமா?

ஐந்தாவது வயதில், எதிர்வீட்டு பங்கஜத்தோடும் பக்கத்து வீட்டு பார்வதியோடும் மணல் வீடு கட்டி மகிழ்ந்து விளையாடிய மண், இங்கே எந்த மண்.

மாலை நேரம் ஆனதும், பாக்கெட் சாரயத்தை மூலக்கடைப் பக்கம் போய் குடித்துவிட்டு, தனக்காக வடை, முறுக்கு என்று வாங்கி இடுப்பில் கட்டிக் கொண்டு வந்து கொடுத்த அப்பா...

முகம் பார்த்து, விருப்பம் அறிந்து, ஆப்பம், பணியாரம், கிழங்கு என்று செய்து கொடுத்து ஊட்டிய அம்மா..இப்ப எங்கே?....எங்கே...?

சிறிது நேரத்தில் படுத்திருந்த, வரதன் எழுந்து உட்கார்ந்தான்.

தாய், தந்தை என்னவாகியிருப்பார்கள்? எங்கே இருப்பார்கள்? ஒருவேளை..எல்லோரையும் போல..நினைக்கவே இதயம் எரிந்தது...

கை,கால் முகத்தில் ஒட்டியிருந்த மணலைக்

கூட பழிகார கடல் நீரில் கழுவ விரும்பாமல் அப்படியே துடைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஆழிப்பேரலையில் அல்லல்பட்டுப் போனவர்களை பள்ளியிலும் சமூகக் கூடங்களிலும் தங்க வைத்திருப்பதாக டி.வியில் பார்த்தது அவன் நினைவுக்கு வந்தது.

எழுந்தான்..சமூகக் கூடங்கள் எங்கே இருக்கின்றன? பள்ளிகள் எங்கே இருக்கின்றன?

கீழே கிடந்த சூட்கேசை எடுத்துக் கொண்டு டவுனை நோக்கி நடந்தான்.

தன் பையில் இருந்த பர்சை எடுத்தான். திறந்தான்.

அதனுள்ளே, அவன் தாய், தந்தை பத்து ஆண்டுகளுக்கு முன் எடுத்திருந்த போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு கண்கலங்கிப் போனது.

நடந்து சென்று கொண்டிருந்தவன்..எதிரே வந்த ஒருவரிடம்...

''சார்...இந்த போட்டோவில இருக்கிற என்னோட அப்பா, அம்மாவை எங்கேயாவது பார்த்தீங்களா?...''ஆவலோடும், எதிர்பார்ப் போடும் கேட்டான்.

''இல்லை தம்பி..நானே என் தம்பியை இரண்டு நாளா தேடிகிட்டு அலையிறேன்..''என்று வருத்தப்பட்டுச் சொன்னார்.

''சாரி சார்...நான் வர்றேன்...'' நடந்தான்.

திறந்த பர்சை மூடாமல் கையில் வைத்த படியே எதிரே வந்த மற்றொருவரைப் பார்த்து, ''இந்த போட்டோவிலே இருக்கிற என்னோட அம்மா, அப்பாவை எங்கேயாவது பார்த்தீங்களா'' கேட்டான்.

''இல்லிங்க சார்...நீங்க வெளியூரிலிருந்து வந்திருக்கீங்க போல இருக்கு..தம்பி இதோ பாருங்க...அதோ தெரியுதே..அந்த சமூகக் கூடத்துல ரொம்ப பேர் தங்கி இருக்காங்க...உங்க அம்மா, அப்பா அங்கே இருப்பாங்க....போய் பாருங்க..'' என்று கூறி நடந்தார்.

அங்கே என் அம்மா, அப்பா இருப்பாங்களா?...நினைக்கவே மனசுக்கு இதமாக இருந்தது...

அடுத்த நொடியே சமூகக் கூடத்தை நோக்கி நடக்க..இல்லை, பறக்கத் தொடங்கினான்.

சமூகக் கூடத்தினுள் ஏகப்பட்ட கூட்டம். எல்லோர் முகத்திலும், செயல்களிலும் பயம். பதட்டம், கண்ணீர், அழுகை, ஆதரவு, அரவணைப்பு.

இந்த நிலையில்தான், அங்கே ஒவ்வொருவரையும் காண முடிந்தது.

ஆவலோடு, ஒவ்வொரு முகமாக உற்று உற்றுப் பார்த்தபடியே, தன் தாயையும், தந்தையையும் தேடிக் கொண்டு இருந்தான், வரதன்.

அங்கே, அவர்கள் இருந்தால் அல்லவா அவன் கண்ணில்படுவார்கள்.

''ஐயா, இவங்க என் அம்மா, அப்பா இவங்கள எங்காவது பார்த்தீங்களா?'' பரிதாபமாக அங்கே நின்றிருந்த ஒருவரிடம் போட்டோவைக் காட்டி கேட்டான் வரதன்

''தம்பி, நானும் உன்னைப் போல என் சொந்தங்களைத் தேடிக்கிட்டுத்தான் தஞ்சையில இருந்து இங்கே வந்திருக்கேன். இந்தக் கலவரத்துல நான் யாரைப் பார்த்தேன்;யாரை பார்த்தேன்னு ஒண்ணும் நினைவிலே இல்லப்பா...இதோ பாரு... அடுத்தத் தெருவுல ஒரு பள்ளிக்கூடத்திலேயும் ஆட்களை தங்க வச்சியிருக்காங்க...அங்கே போய்ப் பாருங்க தம்பி''...என்றவர்

''பாவம் பெத்தவங்களை காணாம பையன் துடிக்கிறான், ஐயோ பாவம்'' என்று சொல்லி அவனது நிலைக்காக வருந்தினார்.

அங்கிருந்தவர்களை மீண்டும் ஒருமுறை ஒவ்வொருவருடைய முகங்களையும் ஏக்கத்தோடு பார்த்தபடியே..அங்கிருந்து வெளியே நடக்கத் தொடங்கியவன்...

'ஒருவேளை நம் அம்மா, அப்பா அங்கே இருப்பாங்களோ?...'

எதிர்பார்ப்போடு பள்ளிக் கூடத்தை நோக்கி விரைந்து நடக்கத் தொடங்கினான்.

ஊர் முழுவதும் கும்பல் கும்பலாக மனிதர்கள்...

எல்லார் முகத்திலும் கோரப் புயல்

துக்கமாய்...துயரமாய்...தவிப்பாய், பாதிப்பை ஏற்படுத்தி இருந்தது.

பள்ளிக்கூடத்தைக் கண்டடைய அவனுக்குச் சிரமம் ஏதும் இல்லை.

அதிகம் கூட்டமிருந்த இடத்தை நோக்கி வேகமாகச் சென்றான்.

கூட்ட நெரிசலில் பள்ளி திணறிக் கொண்டிருந்தது.

''இங்கேயும் என் வீட்டுக்காரரையும் காணுமே..மாரியாத்தா...என் மஞ்சள் குங்குமத்தைக் காப்பாத்தும்மா..''

அங்கிருந்த இருபத்தைந்து வயது பெண் ஒருவர் கண்ணீரோடு கூட்டத்தை விலக்கிக் கொண்டு பள்ளியிலிருந்து வெளிப்பட்டாள்.

அப்பெண்ணின் கண்ணீரும், கதறலும் வரதனினுள் சோகத்தைத் தெளித்துப் போனது.

கூட்டத்தினுள் புகுந்து இடித்துப் பிடித்து பள்ளியினுள் நுழைந்தான்.

அங்கே சிலர், துணிவிரிப்பில் படுத்திருந் தனர்.

சிலர், குத்தங்கால் இட்டு குமுறிக் கொண்டு உட்கார்ந்து இருந்தார்கள்.

சிலர், பசி மயக்கத்திலும் உறவுகளைப் பிரிந்த சோகத் தவிப்பிலும் போராடிக் கொண்டு இருந்தார்கள்.

''ஐயோ சாமி, டீ தண்ணி இருந்தா கொஞ்சம்

கொடுங்கப்பா..''என்று எண்பது வயதில் ஒரு பாட்டி, பக்கத்தில் இருந்தவரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

''ஆத்தா....கொஞ்சம் பொறு..நம்ம ஊர் தலைவரு டீ தண்ணியும், பொங்கலும் அனுப்பிச்சிருக்கிறாராம்... வந்துகிட்டு இருக் குதாம்.'' என்று பாட்டிக்கு ஆறுதலானான், ஒரு இளசு.

கூட்டத்தில் புகுந்து, பள்ளியில் நுழைந்தான் வரதன்...

எத்தனையோ முகங்கள் தெரிந்த அவனுக்கு, அவன் பெற்றோர் முகங்கள் மட்டும் தெரியவே இல்லை.

ஆவலோடு பள்ளியில் நுழைந்த வரதன், துக்கமாய் கேவலோடு அங்கிருந்து வெளிப்பட்டான்.

இன்னும் பள்ளிகள், சமூகக் கூடங்கள் எங்கு இருக்கின்றன?.

கேட்டறிந்தான்...ஒவ்வொரு இடத்திற்கும் எதிர்பார்ப்போடு சென்றான்...ஏமாற்றத்தோடு திரும் பினான்...

அ...ம்மா...அப்....பா பள்ளியின் முன்னே இருந்த தூங்குமூஞ்சி மரத்தின் அடியில் ஆவியடங்கும் உடல் கொண்டவர்கள் போல் அமர்ந்தான்.

கடல் அலைகளாய் அவன் உள்ளம் அலை பாய்ந்து கொண்டு இருந்தது.

'அம்மா..அப்பா...எங்குதான் நீங்க இருக்கீங்க...? கடல்லதான் இருக்கீங்களா?'

சிறிது நேரத்தில் அவன் வாழ்ந்த குடிசைப் பகுதியில் நின்றிருந்தான் வரதன்.

பல்லாயிரம் உயிர்களை தின்று முடித்த களைப்பில் கடல், சோர்வாக அலைக்கரம் நீட்டிக் கொண்டிருந்தது.

'அப்பா, நான் வந்திட்டேம்பா...மனுசனா வந்திட்டேம்பா...நீங்க சொன்னதுபோல் மனுசனா வந்திருக்கேம்பா....வந்து பாருங்கப்பா...கடல்ல இருந்து வந்து பாருங்கப்பா....'

வரமாட்டிங்களா அம்மா! அப்பாவுக்குத்தான் என்னைப் பிடிக்கலே, உங்களுக்குமா என்னைப் பிடிக்கல?

அம்மா...அம்மா...நீங்களாவது வாங்களேன்...வாங்களேன்...'

என்று அழைத்துக் கொண்டே வெறி பிடித்தவனைப் போல், கடலை நோக்கி ஓடிக் கொண்டிருந்த வரதனை அந்தக் குரல்... அந்தக் குரல்...

''மகனே!நீ எங்கப்பா இருக்கே? மகனே...மகனே...நான் இங்கே இருக்கேம்பா... வாப்பா....மகனே..மகனே..''

கடலை நோக்கி ஓடிய வரதன், குரல் வந்த திசையை நோக்கி திரும்பிப் பார்த்தான்..

''மகனே...மகனே...நீ எங்கப்பா இருக்கே?...வாப்பா...''கடல் மணல் குவியலில் படுத்தபடியே படுத்திருந்தவரிடம் இருந்து ஒரு கை

உயர்ந்து அசைந்தது.

''வந்துட்டேம்பா...வந்துட்டேம்பா..'' என்று அவரை நோக்கி ஆவலாய் ஓடினான், வரதன்.

அவர் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்.

''மகனே! மகனே!!''

அழைத்தவரின் முகத்தை உற்றுப் பார்த்தான், வரதன். அழைத்தவர் அவன் தந்தை இல்லை!.

''மகனே பிரபு! கடல் பொங்குச்சே....அதிலே இருந்து தப்பிச்சிட்டியா...நம்ம அடுத்த வீட்டு அருணாசலம், உன்னை அலை அடிச்சுட்டுப் போயிருச்சுன்னு சொன்னான். நான் நம்பல. சமூகக் கூடத்துல எல்லாம் பார்த்துட்டு இங்கே வந்தேன். நீ வந்துட்டியா...அது போதும் எனக்கு..கண்ணுல மண்ணு விழுந்து, கண்ணு தெரியலேப்பா....''

வரதனுக்கு அவரின் உண்மை நிலை புரிந்து போனது..ஆழிப்பேரலையில், அவர் மகன் இறந்து இருக்கிறான்....அறிந்து கொண்டான் வரதன்.

''என்னப்பா நான் பேசிகிட்டே இருக்கேன். நீ சும்மா இருக்கிறே...என்னைப் பார்த்த மகிழ்ச்சியிலே பேச்சு வரிலியா?'' என்று கேட்டார் அவர்.

''ம்.'' என்று மட்டும் ஒலி எழுப்பிவிட்டு அவர் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

அங்கே புதுஉறவு ஒன்று பூத்தது!!

—

# கமலா...கமலா!



சுறா மீனைக் கண்ட, கெண்டை மீன்களாய் மிரண்டு பயந்து, அந்த கிராமத்தில் இருந்த மக்கள் கூட்டம் கூட்டமாய் கரையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள்.

ஓடிவர முடியாத குழந்தைகளை பெற்றோர்கள் தங்கள் தோளில் போட்டுக் கொண்டு ஓடினார்கள்.

நடக்க முடியாத தன் வயதானத் தாயை அணைத்துப் பிடித்து அழுதபடியே அழைத்துக் கொண்டு ஓடினான் ஒரு மகன்.

கால்பதியும் மணல் வெளியில் எவ்வளவு தூரம் ஓட முடியும்?. ஓடினார்கள்.

உயிர் பயம் அவர்களைத் துரத்தியடித்துக் கொண்டிருந்தது. ஓடினார்கள்...

கொஞ்சம் ஓய்ந்தவர்களை, அவர்களைப் பின் தொடர்ந்து வந்த பேய் அலைகள் பாய்ந்து பாய்ந்து தன் கோரக்கரத்தால் பிடித்துக் கொண்டு கடலுள் புகுந்து கொண்டன.

அதைக் கண்டவர்கள்....உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார்கள்..ஓடினார்கள்.

கதறல், கண்ணீர், உயிரின் ஓலம், அந்தப் பகுதி முழுவதும் எதிரொலித்தது...

ஓர் இடத்தில்....

''கமலா...கமலா....ஓடிவா...ஓடிவா...'' அலைங்க பெரிசா வருது ஓடிவா...

''நீங்க போங்க...போங்க....நான் வந்துடுறேன்...''

கூட்டம் அலைமோதி கரையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது.

கூட்ட நெரிசலில் மாட்டிக் கொண்ட கமலம்...கீழே விழுந்தாள்...யாரும் அவளை கண்டு கொள்ளவில்லை. அவரவர் உயிர் அவர்களுக்கு முக்கியமில்லையா?...

''கமலா...கமலா...''கூட்டத்தில் தேடினான்...தேடினான்...

வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான், கணவன்.

அவன் மனைவி... கமலா...

கடற்கரை மணலிலே பாதி புதைந்தும் புதையாத நிலையில்...

ஐயோ ''கமலா... கமலா'' கதறலோடு திரும்பி ஓடினான்.

உயிர் உடலில் ஒட்டிய நிலையில், ''அத்தான் என்னைப் பத்தி கவலைப்படாதீங்க...நீங்க தப்பிச்சுப்

போயிருங்க...அதோ பெரிசா அலை வருது போயிடுங்க...போயிடுங்க....''

''கம்லா உன்னை இந்த நிலையிலே விட்டுட்டு நான் போகமாட்டேன்.''

''ஐயோ அத்தான்..எங்க அண்ணன் வீட்டுல வளர்ற நம்ம பிள்ளைக்காகவாவது நீங்க போக னும்..போயே ஆகனும்...போங்க...கோரமா அலை வருது...போங்க.'' உரத்த குரலில் கத்தினாள் கமலம்.

அதே நிலையில்...

தன் கணவனையும் பொங்கிவரும் அலைகளையும் இந்த உலகையும் காணமுடியாமல் கண்மூடிப் போனாள் கமலம்....

''கமலா எழுந்திரு...நான் உன்னைத் தூக்கிக் கொண்டு ஓடிடுறேன்.'' என்றவாறு தன் மனைவியைத் தூக்கினான். அவள்...துவண்டு அவன் கைகளில் விழுந்தாள்.

அவள் கண்கள், காதுகள், மூக்கு, வாய் என்று எல்லா இடங்களிலும் கடற்கரை மணல் பாசத்தோடு நிறைந்திருந்தது.

அவளையே கூர்ந்து பார்த்தவன்....

உயிரற்ற உடலைப் பார்த்து...

''கமலா...கமலா என்னை விட்டுட்டுப் போயிட்டியா...கமலா'' என்று அவன் அழுது புலம்பிக் கொண்டு இருக்கும்போதே....

தென்னமர உயரத்திற்கு அலைகள் கடலில் இருந்து கோரமாய் சிரித்து கரையை நோக்கி சீறி

வருவதைக் கண்ட கணவன், தங்களது ஒரே பிள்ளையை நினைத்து கரையை நோக்கி ஓடத் தொடங்கினான்.

கரைக்கு வந்து பெருமூச்சு விட்டபடியே, தன் மனைவி கிடந்த இடத்தை, கலக்கத்தோடு திரும்பிப்



பார்த்தான்.

அங்கே....

அவன் மனைவியின் உடல் இல்லை..

வந்த அலை, அவளை வாரிக்கொண்டு கடலுக்குள் போயிருந்தது.

''கமலா...கமலா.''

கரையில், ஒரு மேட்டில் தூக்கி எறியப்பட்ட கமலாவின் கணவன் இப்படி, மயக்க நிலையில் புலம்பிக் கொண்டிருந்தான்.

---

# வேரும், விழுதும்...



சமூகக் கூடத்தில் பல நூறுபேர்கள், அடைக்கலமாகி இருந்தார்கள். அவர்களின் மனம் முழுவதும் கவலைகள், கண்கள் முழுவதும், வற்றாத கண்ணீர்த் துளிகள்...

அப்பா என்னவாகி இருப்பார்? அம்மா என்ன வாகி இருப்பார்? குழந்தை என்னவாகியிருப்பான்? தம்பி, தங்கை எங்கே போயிருப்பார்கள்? அண்ணன்,அக்காள் என்னவாகி இருப்பார்கள்? தாத்தா, பாட்டிக்கு என்னவாகி இருக்கும்..? பேரன் பேத்திகள் எங்கே தவிக்கிறார்களோ? தத்த ளிக்கிறார்களோ?

மாமா,அத்தை என்னவானார்களோ....

பெரியப்பா, சித்தப்பா எங்காவது மாட்டி இருப்பார்களா? சித்தி, பெரியம்மா என்னவாகி இருப்பார்கள்?

இப்படி கேள்விகள் ஒவ்வொருவர் இதயத்திலும் எழுந்து எழுந்து ஆவேசம் வந்த அலைகளாய் மோதிக் கொண்டிருந்தன.

''ஐயா, அம்மா எல்லாரும் வாங்க...சோறு வந்திருக்கு...வரிசையா நில்லுங்க..''என்றார் ஒருவர். இரண்டு, மூன்று வேளை பட்டினி கிடந்து கண்கள் இருட்டிப்போன நிலையில் சிலர்... வரிசையில் நின்றார்கள்.

''கடவுள் நமக்கு இப்படி ஒரு நிலையை ஒரே நாளில் தந்துட்டாரே..அவர் இதயமுள்ளவரா? இரக்க மற்றவரா'' என்று சிலர் புலம்பிக் கொண்டு அழுக்காய், அலங்கோலமாய் அமர்ந்திருந்தார்கள்.

தாயின் மடியில், பால்சுரக்காததால் அவள் முகம் பார்த்து அழுது கொண்டு இருந்தது, ஒரு குழந்தை.

கணவனை கண்ணெதிரிலேயே பறிகொடுத்த அவள் கண்களில் இருந்து இன்னும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. சுய நினைவின்றி சோர்ந்து போயிருந்தாள், அந்தப் பெண்மணி.

'பெற்ற தாயைக் காப்பாற்ற முடியாத நிலையில், நாம் திசைமாறி விட்டோமே!' என்று மகன் ஒருவன் மூலையில் முடங்கிக் கிடந்து, முனகிக் கொண்டு கிடந்தான்.

கூட்டத்தில்...

''இந்தாப்பா, கொஞ்சம் தள்ளு

வயித்துப் பிள்ளைக்காரி, எல்லாத்தையும்

இழந்துட்டு பசியோடு தவிக்கிறா...''

''இந்தாம்மா இதை உடனே கொண்டுபோய் கொடுங்க'' ஒருவன் ஆறறிவோடு மனிதனாய் நடந்து கொண்டான்.

''எல்லாம் உங்களுக்குத்தான் வந்திருக்கு. ஏன் இப்படி ஆடு, மாடுங்க மாதிரி நடந்துக்கிறீங்க?'' ஐந்தறிவில் ஒருவன் பேசிக் கொண்டிருந்தான்.

பனிரெண்டு வயது சிறுவன் ஒருவன், தன் அருகில் அமர்ந்திருந்த ஒரு பாட்டியை கூர்ந்து பார்த்தபடியே, உயிர்விட்ட இறாலைப் போல சுருண்டு படுத்திருந்தான்.

அவன் நினைத்தான்...

இவுங்க நம்ம பாட்டியைப் போலவே இருக்காங்களே...அவுங்களும் நம்மையே பாத்துட்டு இருக்காங்க...அவுங்களுக்கு நம்மைப் போல பேரன் இருந்து...இப்ப தவறி போயிருப்பானோ...? இந்தப் பாட்டியோட பேசனும் போலே ஏன் தோணுது?

நம்ம பாட்டி நேத்தி இருந்தாங்க... இன்னைக்கு....நினைத்ததுமே...அவன் கண்கள் கலங்கின. பாட்டி மட்டும் இப்ப இருந்தா....

பாட்டியின் நினைவு அவனுள் வந்தது...நின்றது...

''பாட்டி....போதும் பாட்டி.''

''இன்னும் ஒரு இட்லி மட்டும் சாப்பிட்டுடுக் கண்ணு..''

''போங்க பாட்டி...இட்லி வேணாம்..''

என்று சொன்னான் பேரன்.

''இது மட்டும்...இது மட்டும்.'' என்று பாட்டி கெஞ்சினார்.

''போங்க பாட்டி...சட்னி காரமா இருக்கு..'' என்று சொல்லி வெளியில் ஓட நினைத்தவனைப் பிடித்து ''என் கண்ணுல்ல...இதோ பாரு... சர்க்கரைத் தொட்டுத் தர்றேன்..வா.'' என்று பேரனின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''சரி பாட்டி...நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வர்றேன், பாட்டி''.

''இந்தாக் கண்ணு... ஸ்கூல் விட்டு வரும் போது ஏதாவது பிஸ்கெட்டு வாங்கிக்க...''என்று தன் முந்தானையில் நான்காக மடித்து வைத்திருந்த ஒரு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார். உச்சி முகர்ந்தார்.

''சண்முகம் ரோட்டுல காரு, பஸ் வரும் பார்த்து ஓரமா போயிட்டு வாப்பா'' என்று சொன்னார்.

''சரி பாட்டி, நான் போயிட்டு வர்றேன.''

பனிரெண்டு வயது சண்முகத்தின் மனதில் நின்றிருந்த பாட்டியின் நினைவு கலைந்தது....

அவன் கேவிகேவி அழுது கொண் டிருந்தான்.

சமூகக் கூடத்தில் அரசு அதிகாரிகள், தொண்டு நிறுவனத்தார் என்று கூட்டம் அங்கே நிறைந்து கூடியது.

ஒரு புறம் அங்கே தங்கி இருந்தவர்களுக்கு துணிமணிகளையும், மற்ற தேவையான பொருள்களையும் இலவசமாக சிலர் வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் பாட்டி....



தன் அருகில் சுருண்டு படுத்திருந்த அந்தச் சிறுவனையே பார்த்துக் கண் கலங்கிக் கொண்டிருந்தார்.

அவர் நினைத்தார்...

இவன் நம் பேரன் முருகனைப் போலவே இருக்கிறானே...இவன் ஏன் நம்மையே பார்த்துக் கொண்டு இருக்கிறான்? நம்மைப் போல்

இவனுக்கும் பாட்டி இருந்திருப்பார்களோ...? இப்ப தவறி இருப்பாரோ? இந்தப் பிள்ளையோட ஏன் பேசணுமுன்னு தோணுது நமக்கு.

நம்ம பேரன் நேத்தி இருந்தான்... இன்னைக்கு?

அதை நினைத்ததுமே நெஞ்சு வலித்தது பாட்டிக்கு...

அவன் மட்டும் இப்ப இருந்தா...நேற்றைய நினைவில் பாட்டி மூழ்கினார்....

''என்ன பேராண்டி படிக்கிறே.''?

அவன் படித்துக்கொண்டிருந்த பாடத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு..'' பாட்டி நீங்க படிச்சி ருக்கீங்களா'' கேட்டான்.

''இல்லப்பா...பேராண்டி.''

''தாத்தா படிச்சாங்களா''

''ம்...அந்தக் காலத்துல அஞ்...சா...வது படிச்சாங்களே...நம்ம தெருவுலேயே உங்க தாத்தாதான் எழுதுற அளவுக்குப் படிச்சவங்க...எங்க கல்யாணத்துக்கு அப்புறம் என்னோட பேரை எழுத உங்க தாத்தா, யாருக்கும் தெரியாம ராத்திரியிலே கத்துக் கொடுத்தாங்களே...'கனகு' ன்னு இப்பக்கூட நான் கையெழுத்துப் போடுவேன்..''என்று பெருமை யாகச் சொல்லி பாட்டி சிரித்தார்.

''அப்படியா பாட்டி..''என்று சிரித்துக் கொண்டே அவரின் கழுத்தைக் கட்டிக் கொண்டான், பேரன் முருகன்.

''என் கண்ணு சாப்புட்டியா..''

''நான் எப்பவும் உன்னோடுதானே பாட்டி சாப்பிடுவேன். உங்களுக்குப் பசிக்குதா பாட்டி..'' என்று அவர் கன்னத்தைத் தடவிக் கொண்டே கேட்டான், பேரன்.

''ஆமாண்டா பேராண்டி... வயசாயிடுச் சுல்ல...அதான்...நீ பாடம் எல்லாம் படிச் சிட்டியாப்பா..'' கேட்டார்.

''பாட்டி...நாம சாப்பிடுவோம்...நான் அப்புறம் படிச்சுக்கிறேன், பாட்டி...வா பாட்டி நீ முதல்ல சாப்பிடு.''

''என் கண்ணு, வாப்பா..''

'''அம்மா, பாட்டிக்கும் எனக்கும் சோறு போடு.''

''பாட்டி சோறு வாங்கப் போகலியா'' என்று ஒருவர் வந்து கேட்டதும், பாட்டி தன் பேரனின் நினைவில் இருந்து மீண்டார்.

கேவிகேவி அழ ஆரம்பித்தார், பாட்டி.

''சோறு வாங்கலியான்னு கேட்டா ஏன் பாட்டி அழுவுறே?''

என் குடும்பத்தோட, என் பேரனோடவே இந்தக் கடலு என்னையும் போட்டு முழுங்கி இருக்கக்கூடாதா? ஏன் என் உயிரு இன்னும் இருக்கு? விதி இப்படி என்னைத் தவிக்க விட்டுடுச்சே...இனி எப்படிப் பொழப்பேன்..? இனி எனக்கு யார் துணை'' என்று சொல்லி பாட்டி மீண்டும் அழத் தொடங்கினார்.

''இனி எனக்கு யார் துணை.?'' என்ற

வார்த்தைகள் முருகனின் இதயத்தில் ஈட்டியாய் குத்தியது.

இந்தப் பாட்டி பேசியது, தன் பாட்டி உயிரோடு இருந்து பேசியது போலவே, கேட்டது போலவே, முருகனுக்குப் பட்டது...

எழுந்தான். பாட்டியின் அருகே இருந்தான்..

கண்களில் நீர் வழிய வியப்போடு பாட்டி அவனையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

''பாட்டி..''

''என்னையா கூப்பிட்டே'' சந்தோசமாய் கேட்டார், பாட்டி.

''ஆமாம் பாட்டி...உங்களைத் தான் கூப்பிட்டேன்.''

''உண்மையாகவா'' ஐயத்தோடு கேட்டார் பாட்டி.

''உண்மையாதான் பாட்டி...இனி உங்களுக்குத் துணையா இருப்பேன் பாட்டி...நான் உங்களை உழைச்சிக் காப்பாத்துவேன் பாட்டி... அழாதீங்க பாட்டி.''

''பேராண்டி...பேராண்டி...இனி நான் அழமாட்டேன்..பேராண்டி.... அழ மாட்டேன்..'' என்று அவனை ஆனந்தக் கண்ணீரோடு அணைத்துக் கொண்டார்.

''பாட்டி...பாட்டி..'' அவனும் ஆனந்தக் கண்ணீரோடும், பாசத்தோடும் அணைத்துக் கொண்டான். அங்கே நம்பிக்கை ஊற்றாய் பெருக இருவரும் அவர்களின் புதிய வாழ்க்கையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

வேருக்கு விழுது துணையானது!

# கடைசி ஆசை



அந்த மருத்துவ மனையில் ஒரு படுக்கையில் படுத்திருந்த இளைஞனுக்கு சற்றுத் தள்ளி மூன்று மருத்து வர்கள் நின்று பேசிக் கொண்டு இருந்தார்கள்.

''மிஸ்டர் நரேஷ்..மேற்கொண்டு என்ன செய்யலாமுன்னு நினைக்கிறீங்க''

''நானும் அதைப்பத்திதான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்,குமார்''

''நரேஷ்,குமார் இந்த இளைஞனுக்கு அடித்த புயலில் சுவர் விழுந்து இடுப்புக்கும் கீழே பாடி ரொம்ப டேமேஜாயிடுச்சு. அந்த உறுப்புகளை அப்புறப்படுத்தவும் முடியாது. அப்படி செய்தாலும் உயிரைக் காப்பாற்றுவது என்பது சிரமமான ஒன்றுதான். அதுதான் எனக்கு யோசனையா இருக்கு.''

''சார்...'' என்று படுக்கையில் கிடந்த இளைஞன் முனகினான்.

ஒரே நேரத்தில் மருத்துவர் மூவரும்

அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அவன் கையை அசைத்து அவர்களை அழைத்தான்.

''என்ன..'' என்பது போல மூவரும் அவனிடம் வந்தனர்.

''சார் அடிச்ச கோரப் புயல்ல நான்...என் அம்மா, அப்பா, தங்கை, அக்காள்னு எல்லாரையும் இழந்துட்டேன்... இனி நான் இழக்க என் உயிரைத் தவிர ஒண்ணும் இல்லை. அந்த உயிரும் இன்னும் எத்தனை மணிநேரத்துக்கோ, எத்தனை நிமிடத் துக்கோ அது எனக்குத் தெரியாது. இந்த நிலையில நீங்க எனக்கு ஓர் உதவி செய்வீங்களா?

''என்ன சொல்லுப்பா.''நரேஷ் கேட்டார்.

''தூக்குல போடுறதுக்கு முன்னால உங்க கடைசி ஆசை என்னென்னு கேட்பாங்களே...அது போல இப்ப, நான் கேட்கப் போறது என் கடைசி ஆசை...நிறைவேத்துவீங்களா...''

''நீ என்னப்பா சொல்றே..'' கேட்டார் குமார்.

''ஐயா..தயவு செய்து நான் சொல்றதைக் கேளுங்க. நான் உயிரோடு இருந்தபோது யாருக்கும் எதுவும் பெரிசா செய்துருல..இப்ப ஏதாவது செய்யனுமுன்னு நினைக்கிறேன்...அதை நீங்க செய்வீங்களா?...''கண்கள் கலங்க பேசினான்.

''என்ன செய்யனுமுன்னு சொல்லுப்பா..'' என்று கேட்டார், முகிலன்.

''என் உடல் உறுப்புல பழுது இல்லாம இப்ப

இருக்கிறது கண்ணு மட்டும்தான்னு நெனக்கிறேன்... அதை சோதிச்சுப் பாருங்க.. நல்லா இருந்தா, அதை யாருக்காவது பயன்படுத்துங்க...அது போதும் எனக்கு..''என்று சொன்னான் அந்த இளைஞன்.

அவன் சொன்னதைக் கேட்டு, மருத்துவர்கள் மலைத்துப் போய் நின்றிருந்தார்கள்.

அதே நேரத்தில்

''சார்...சார்..''என்று அழைத்த அந்த இளைஞனின் குரல் அத்தோடு அடங்கிப் போயிற்று.

அவனது நாடியைத் தொட்டுப் பரிசோதித்த மருத்துவர் முகிலன், கலகத்தோடு அவன் கையை கீழே வைத்தார்.

அருகில் நின்றிருந்த இருவரையும் விரக்தியோடு பார்த்தார்.

இளைஞனின் கண்கள் திறந்தபடியே... கண்கள் திறந்தபடியே...

அவனது கடைசி ஆசை ஒளிபெற்றது.

# மகனே, வந்துட்டியா!..



"நீ என்னதான் நினைச்சுகிட்டு இருக்கேப்பா; திருந்தவே மாட்டியா" என்று மிகுந்த கோபத்தோடு கேட்டார், இப்ராகிம் ராவுத்தர்.

"நான் என்ன தப்பு செய்தேன்; நான் இப்படி சத்தம் போடுறீங்க.." என்று கேட்டான் மகன், சம்சுதீன்.

"நீ நம்ம தகுதியை மறந்து குப்பத்திலே இருக்கிற அந்தோணியோட பொண்ணுகிட்ட பழகிகிட்டு இருக்கிறதைக் கேட்டா, அது உனக்கு சத்தம் போடுறதா படுதா..?" எழுபத்தைந்து வயதிலும் கணீரென்று கேட்டு நின்றார்.

இவர்கள் போடும் சத்தத்தைக் கேட்டு அடுக்கலையில் இருந்து ஓடி வந்து அறையில் மறைந்து நின்று கொண்டார் சம்சுதினீன் தாயார், பாத்திமா.

"இன்னைக்கு நேத்தா பழகிகிட்டு இருக்கேன்..? அவள் என்னோடு படிக்கிற

காலத்திலே இருந்தே பழகிக்கிட்டுத் தானே இருக்கேன்.." என்றான், சம்சுதீன்.

படிக்கிற காலத்துல அவளும் சின்னப் பொண்ணு. நீயும் சின்னப் பையன். அப்ப, அது இந்த ஊருக்கும், எங்களுக்கும் தப்பா தெரியாது. இப்ப...

நீயும், அவளும் சின்னப் பிள்ளைகள் இல்ல...

அவள் வயசுக்கு வந்தப் பொண்ணு. நீயும், இருபத்து நாலு வயது வந்தவன். உனக்கும், உன் அக்காள் மகளுக்கும் வர்ற மாசத்துல நிக்கா செய்யலாமுன்னு இருக்கிறோம்..அதனால்தான் சொல்றேன்...நீ இனியும் அவளோட பழகறதை நிறுத்திக்க கண்ணு...

''எனக்கு நிக்கான்னு ஒண்ணு நடந்தா அது அவளோடதான்..''

''நீ என்னடா சொல்றே....? கோபத்தில் வெடித்தார், தந்தை.

''என் முடிவை சொல்றேன்.''

''ஏய் பாத்திமா, இங்கே வாடி''பயந்தபடியே அங்கே ஓடி வந்த அவர் மனைவி, 'கண்ணு அப்படி எல்லாம் பேசக் கூடாதுப்பா..வாப்பா சொல்றதைக் கேளு. நாங்க, நீ நல்லா இருக்கனுமுன்னுதானே விரும்புறோம்...

''என் முடிவுக்கு விட்டாதான், என் வாழ்க்கை நல்லா இருக்கும் விட்டுடுங்க''

''விட மட்டேன்டா...என் உயிர் இருக்கிற வரைக்கும் அவளோட, உன்னை வாழ

விடமாட்டேன்டா, நான்'' கண்கள் கோபத்தால் சிவந்து போயின.

''என் செல்லம்..நீ படிச்சவன், இப்படி வாப்பாவை எதிர்த்துப் பேசலாமா?''என்று மகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கலகத்தோடு பேசினார், தாய்.

''நானா பேசுறேன். பேச வைக்கிறீங்க...''

''முடிவா நீ என்னதாண்டா சொல்றே...?'' கேட்டார், மீண்டும் கோபத்தோடு.

''என் முடிவை நான் முன்னேயே சொல் லிட்டேன்.''

''நீ இவ்வளவு தூரம் வந்த பிறகு நானும் என் முடிவைச் சொல்லிடுகிறேன்...இப்ப இருக்கிற இந்த சொத்து எல்லாம் என் சுயமா சம்பாதித்தது.''

நீ அந்தப் பொண்ணத்தான் கட்டிப்பேன்னா, என் சொத்துல ஒரு பைசா உனக்குத் தர மாட்டேன், இன்னையிலேயிருந்து என் கடைப்பக்கம் நீ வர வேணாம். நானே பாத்துக்கிறேன். நீ குப்பத்துல போய் வாழ்ந்தாலும் சரி, அவங்களோட வலை வீசினாலும் சரி.

இன்னையிலே இருந்து என் மக மட்டும்தான் எங்களுக்குப் பொறந்தவன்னு நினைச்சிக்கிறோம். இப்ப இருந்து எங்களுக்கும் உனக்கும் உறவு இல்லை'' முடிவோடு உறவை முறித்தார்.

''எனக்கு விடுதலைன்னு சொல்றீங்க.... நல்லது'' மகிழ்ச்சியோடு சொன்னான்.

''உன்னை தலை முழுகிட்டேன்னு சொல்றேன்''

இவர்கள் பேசுவதைக் கேட்டு துடித்துப் போன அவன் தாய், ''என்னாங்க...ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க?... என் கண்ணு, மனசை மாத்திக்கப்பா... வாப்பா சொல்றதைக் கேளுப்பா... இப்படி நீ நடக்கறதுக்காகவா நாங்க உன்னை பெத்து வளர்த்தோம்? சொல்றதைக் கேளுப்பா...''

''அம்மா... என்னை மன்னிச்சுடுங்க..நான் வர்றேன்.''

மகன் நடந்து போனான்.

மாதா மனம் கலங்கிப் போனாள்.

-

தன் நண்பன் சம்சுதீன் சொல்லியதை எல்லாம் அமைதியாக இருந்து கேட்டு முடித்த பொன்னரசன் -

''இப்ப முடிவா, நீ என்னதான் செய்யப் போறேடா?'' கேட்டான்.

''எங்க அப்பா போலவே...கடலுக்குப் போறவங்களுக்கு வேண்டிய வலை, நூல், துடுப்புன்னு வச்சி ஒரு கடை போடணும்... அவ்வளவுதான்'' என்றான், சம்சுதீன்.

''சரி, இதுக்கெல்லாம் பணம்?''...

''டே...நான் படிச்சு முடிச்சதுலே இருந்து, கடையிலேதான் இருந்திருக்கேன். அது உனக்குத் தெரியும். அதனால, அந்தத் தொழில்ல பலபேரை

எனக்கு நல்லா தெரியும்...அந்த வியாபரிங்க நான் தனியா கடை போடுறேன்னு சொன்னா முன் பணம் வாங்காமலேயே பொருள் கொடுப்பாங்க... இப்ப கடை போட ஓர் இடம்தான் வேணும்...'' என்றான், சம்சுதீன்.

''அவ்வளவுதானே...இடம் நான் தர்றேன்... போதுமாடா..'' கேட்டான், பொன்னரசன்.

''அது போதும்டா...'' என்று அவன் கையை நட்போடு பற்றிக் கொண்டான் சம்சுதீன்.

''சரி நீ என் லாட்ஜிலேயே ஒரு ரூமிலே தங்கிக்கிட்டு, உன் வேலைகளை கவனி. இங்கேயே சாப்பிட்டுக்க..நான் இப்ப பேங் வரை போயிட்டு வந்துடறேன்.'' என்று சொல்லி புறப்பட்டுப் போனான், பொன்னரசன்.

சம்சுதீனும், பொன்னரசனும் முதல் வகுப்பில் இருந்து, பள்ளி இறுதி வகுப்பு வரை ஒன்றாகப் படித்தவர்கள் மட்டுமல்ல. ஒருவரைப் பிரிந்து ஒருவர் இருந்தார்கள் என்றால் இரவில் அவரவர் வீட்டிலே மட்டும்தான் என்பது போல எப்போதுமே இணைந்து நட்போடு இருந்தவர்கள்.

சம்சுதீன் கடலோரக் குப்பத்தில் இருக்கும் மீன் பிடிக்கும் அந்தோணியின் மகள் ஸ்டெல்லாவும் சிறுவயது முதல் நட்போடு இருந்து, இன்று அந்த நட்பு காதலாகி மலர்ந்தது வரையிலும் பொன்னரசனுக்கு பங்குண்டு. அப்படி ஒரு பயன் கருதா நட்பு இருவருக்கும்.

பொன்னரசன், அவன் தந்தை மாரடைப்பால் இறந்தது முதல் அவன் மேற்கொண்டு படிப்பைத் தொடராமல் அவர் நிர்வகித்து வந்த புனிதா லாட்ஜை கவனிக்கத் தொடங்கினான்.

சம்சுதீனோ, தன் வயதான தந்தைக்கு ஆட்களோடு ஆட்களாய் கடையில் துணையாக இருந்தான். தந்தையின் தொழிலைப் பழுதறப் படித்துக் கொண்டான். வியாபார நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டான்.

தன் ஒரே தம்பி, தான் தூக்கி வளர்த்த தம்பி...பாசமாய் வளர்த்தத் தம்பி வீட்டை விட்டு போய்விட்டான் என்ற செய்தி கேட்டு, மனம் துடித்துப் போனாள் சம்சுதீனின் அக்காள் நூர்ஜகான்.

தான் கேட்ட செய்தியை சிங்கப்பூரில் இருக்கும் தன் கணவர் அமீருக்கும் அவள் தெரிவித்தாள்.

அவர் சொன்ன படியும் அவள் நடக்கத் தொடங்கினாள்....

"சம்சுதீன் சார், உங்களுக்கு போன் வந்திருக்கு."

"கொடுப்பா.."

"தம்பி சம்சு, அக்கா பேசுறேன்.. வாப்பாவும், அம்மாவும் இப்பதான் வந்துட்டுப் போறாங்க... ஏனப்பா இப்படி செய்திட்ட?

இதோ பாரு தம்பி, வாப்பா இந்த ஊருல எவ்ளோ பெரிய ஆளு, அது உனக்குத்

தெரியும்தானே..நீ இப்படி லாட்ஜிலே எல்லாம் போய் தங்கிக்கிட்டு இருந்தா அது வாப்பாவுக் குத்தானே கேவலம்.

நீ நம்ம வீட்டுக்குப் போக வேணாம். என் வீட்டுல வந்து தங்கிக்க...உன் மச்சானும் இப்ப போன் பண்ணி அதைத்தான் சொன்னாங்க....

தம்பி, அம்மா மனசால ரொம்ப உடைஞ்சு போயிட்டாங்கப்பா....

வாப்பா சாப்பிடுறதைப் பத்திக்கூட கவலைப்படாம...நீ சாப்பிட்ட பின்னே தானேப்பா அம்மாவே சாப்பிடுவாங்க...அதை நீ எப்படிப்பா மறந்துட்டுப் போன....

நான் இப்ப காரை அனுப்புறேன்..நீ உடனே என் வீட்டுக்கு வாப்பா...வந்திருப்பா..''என்று கெஞ்சிக் கேட்டு புலம்பினாள்.

''என்னை மன்னிச்சுடுக்கா...உனக்குக் கூட என்மேல கோபமிருக்கும்..''

''உன் மேல எனக்கு எதுக்குப்பா கோபம் வரப்போவுது?...'' என்று கேட்டாள்.

''உங்க மகளை நான் கட்டிக்காம வேற ஒரு பெண்ணைக் கட்டிக்கப் போறதுனாலதான்''

''சத்தியமா சொல்றேன்டா தம்பி, முதல்ல நானும் உன் மச்சானும் நினைச்சி இருந்தது உண்மைதான். ஆனா, இப்ப அந்த எண்ணமே இல்லையடா.. நீ எப்படியும் எங்கே யாரோடு இருந்தாலும், நல்லா இருக்கணுமுன்னு மட்டுமே

தாண்டா நினைக்கிறோம். இதுதான் உண்மை. சத்தியம்.

இதோ பாருடா தம்பி...எல்லாத்தையும் மறந்திடு...என் வீட்டுலே நீ இருந்தா அம்மா மனசு கொஞ்சம் ஆறுதல் படும்.

நீ எங்கேயோ தங்கி, எதையோ சாப்பிட்டுகிட்டு இருக்கேன்னு இருந்தா அம்மா படுத்த படுக்கையா ஆயிடுவாங்கப்பா...அதனால, உடனே இங்கே வந்துடுப்பா.'' என்று சொல்லி போனிலேயே அழுதாள்.

''அழாதேயக்கா..எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு...அதை முடிச்சுட்டு வர்றேன்..அம்மாவை கவலைப்படாம இருக்கச் சொல்லுங்க..''

''சரிப்பா..உடனே வேலையை முடிச்சிட்டு வந்துடுப்பா...உனக்குப் பிடிச்சதை எல்லாம் சமைச்சு வைக்கிறேன்.'' என்றாள்.

''நான் வர்றேன்...சாப்பிடுறதுக்கில்ல...''

''சரிப்பா...நீ எப்படியாவது வந்தா போதும்...அதுபோதும் வந்துடுப்பா.''

''சரியக்கா..''என்று கூறி போனை வைத்தவன், தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

கடற்கரை...

அங்கே இருந்த ஆலமரத்தின் அடியில் சம்சுதீனும், ஸ்டெல்லாவும் அமர்ந்திருந்தார்கள்.

ஸ்டெல்லா அழுது கொண்டிருந்தாள்.

''நீ அழுதுகிட்டு இருந்தா நான் போயிடுவேன்''.

கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்னால தானே உங்களுக்கு இந்த நிலை?'' சொன்னாள், ஸ்டெல்லா.

''இதைக் கேட்கிறதுக்காகவா நான் உன்னைப் பார்க்க வந்தேன்?'' கேட்டான், சம்சுதீன்.

''என் அப்பாவும் என்மேலே கோபமா இருக்காரு.'' என்றாள்.

''நான் எதிர்பார்த்ததுதானே...''

''நீங்க வீட்டை விட்டே என்னாலே வெளியே வந்திட்டீங்க...எப்படிங்க நாம வாழறது...?'' கலக்கத்தோடு கேட்டாள், ஸ்டெல்லா.

''நான் வந்ததும் சொன்னேனே அது போலத்தான்...''

''முடியுங்களா''....விரக்தியோடு கேட்டாள்.

''நம்ம போல காதலிக்கிறவங்களுக்கு முதல்ல இருக்க வேண்டியதே எதுவும் காதலால முடியுங்கற நம்பிக்கைதான் இருக்கணும். இதோ பாரு ஸ்டெல்லா..கொஞ்ச நாளைக்கு இந்த ஊருல அப்படி இப்படி பேசுவாங்க..அப்புறம் எல்லாம் சரியாய் போயிடும்.முதல்ல நாம சரியா இருக்கணும். அதுதான் முக்கியம்.

நீ கவலைப்படுறதையும், கண்ணீர் விடுறதையும் முதல்ல நிறுத்து..'' என்று அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான், சம்சுதீன்.

அவன் மார்பில் சாய்ந்தாள்.

''நான் சொன்னதுபோல ஏற்பாடாய் இரு. உங்கப்பா நாளைக்குக் கடலுக்குப் போவாருதானே...'' கேட்டான்.

''போவாரு..''

''சரி. நல்லது..மதியம் சாப்பிட்டியா''

''நீங்க சாப்பிட்டிங்களா?''

''நான் இல்லாததால, அம்மா சாப்பிடாம இருக்காங்கலாம்..இப்பதான் அக்கா போன் பண்ணி சொல்லிட்டு அழுதாங்க..''

''என்னால, உங்க உறவு எல்லாமே பிரிவாயிடுச்சே. அதை நினைக்கும் போது...?'' அழுதாள்.

''நினைக்கும் போது...?'' கேட்டான்.

''செத்திடலாமோன்னு தோணுது..''

''இரண்டு பேரும்தானே...? கேட்டான்.

''நான் மட்டும்...''

'பளீர்' என்று அவள் கன்னத்தில் ஒலி எழுந்தது.

''என்னை மன்னிச்சிடுங்க.''

''சாரி ஸ்டெல்லா..''

''பரவாயில்லீங்க..நீங்க புறப்படுங்க..''

''நான் சொன்னது எல்லாம் நினைவு இருக்குல்ல...''

இருக்கு...யாராவது நம்மைப் பார்த்திடப் போறாங்க...நீங்க போங்க..''

‘‘நீ கவலைப்படாம இரு. காலையிலே நான் வர்றேன்..’’

இருவரும் பிரிந்து நடந்தார்கள்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு...

நண்பர்களின் துணையோடு திருமணப் பதிவு அலுவலகத்தில், சம்சுதீனுக்கும், ஸ்டெல்லாவிற்கும் திருமணம் எளிதாக - இனிதாக நடந்து முடிந்தது

பெரிய தெருவிலும் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, குடும்பம் நடத்தத் தொடங்கிவிட்டார்கள்.

ஸ்டெல்லாவின் அப்பாவோ, சம்சுதீனின் தாயோ தந்தையோ தவறியும் அவர்கள் இருந்த வீட்டுப் பக்கம் கூட வந்தது இல்லை.

வழியில் தப்பித் தவறிப் பார்த்தபோது கூட யாரும் பேசியதில்லை.

தம்பியின் மீது கொண்ட பாசத்தால் சம்சுதீனின் அக்காள் மட்டும் யாருக்கும் தெரியாமல் அவ்வப்போது வந்து இருவரையும் பார்த்துப் போவாள்.

மூன்று மாதங்களில், தொடங்கிய வியாபாரத்தை அபிவிருத்தி செய்து இருந்தான், சம்சுதீன்.

அவ்வூரில் இருந்த முஸ்லிம் பெரியவர்கள் எல்லாம், சம்சுதீனை அருவறுப்போடு பார்த்தார்கள்.

இளைஞர்களோ, அவனை விருப்போடு பார்த்து நலம் விசாரித்து பழகிக் கொண்டு

இருந்தார்கள்.

பொன்னரசன் அவனுக்குத் தக்க துணையாக எப்போதும்போல் பக்கம் இருந்து வந்தான்.

அன்று காலை வேளை...

கடலோரம் இருந்த குப்பங்களில் எல்லாம் கடல் அலை புகுந்து கோரமாய் விளையாடத் தொடங்கியது....

அந்த விளையாட்டில்...குப்பத்தில் இருந்த குடிசைகள் எல்லாம் கடலில் மிதவைகளாய் இறந்த யானைகளைப் போல் மிதந்து கொண்டிருந்தன.

சில மனிதர்களும் உயிர் பிரிந்த நிலையில் மிதந்து கொண்டு இருக்கவும் செய்தார்கள்.

கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றவர்கள் என்ன ஆனார்களோ ஏதானார்களோ வெளியார் அறிய வாய்ப்பு இல்லாத நிலை...

கடைகளை மட்டுமா?...அங்கிருந்த சில மனிதர்களையும் விட்டு வைக்காமல் கடலுக்குள் பேரலை அணைத்து அழைத்துப் போனது...

அதில் சம்சுதீனும் அடக்கம்.

ஊரே ஓலம்...அழுகுரல்..அங்குமிங்கும் தவிப்போடு ஓட்டம்.. ஓலங்கள்... பதுங்கள்... மக்கள், உறவை மறந்து...சுற்றம் துறந்து பொருளை மறந்து...உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில்... ஊரே முள் பட்டுக் கிழிந்த வாழை இலையைப் போல சில மணி நேரங்களில் கிழிந்துபோய், அழிந்துபோய் கிடந்தது.

பாதைகள் இடம் மாறிப் போயின...மரங்கள், வேர்களை வெளிக்காட்டிக் கிடந்தன; சில வீடுகள் மூளியாகி நின்றன. ஆங்காங்கே வாகனங்கள் வாய் பிளந்து கிடந்தன. இவைகளுக்கு இடையே

சில உயிர்கள் ஊசலாடிக் கொண்டும் உயிர்விட்ட நிலையிலும் கிடந்தன...

பலரது வாழ்க்கை தடம் மாறிப் போனது; சிலரது வாழ்க்கை நிலை மாறிப் போனது; சிலரது வாழ்க்கை சிதைந்து போனது; பலரது வாழ்க்கை கேள்விக் குறியாய் நின்றது...

வீட்டிலிருந்து காலையில் வெளியில் சென்றவர்களைத் தேடும் முயற்சியில் பலர்...

அவர்களோடு ஒருத்தியாக...கும்பலோடு கும்பலாக காலையில் கடை திறக்கச் சென்ற தன் கணவன் சம்சுதீனைத் தேடி கலக்கத்தோடு ஸ்டெல்லாவும்....

அவளின் கடை கரையோரம் காணவில்லை....

சம்சுதீனை பேரலை ஒன்று இழுத்துப் போனதை ஒருவர் அங்கே சொல்லிக் கொண்டு இருக்கும் போதே ஸ்டெல்லாவிற்கு கண்கள் இருளத் தொடங்கின; கால்கள் துவளத் தொடங்கின. உடல் நடுங்கத் தொடங்கின... பக்கத்திலிருந்த பெண் ஒருத்தி அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள்...

பின் அவள் நினைவு திரும்பியபோது....

ஸ்டெல்லாவின் தந்தையும் கணவனும்

இறந்துபோன செய்தி உறுதி செய்யப்பட்டு... வெளியிடப்பட்டது.

ஸ்டெல்லா, இடிவிழுந்த மரமாய், தீப்பட்ட புழுவாய் ஆனாள்.

சிறுவயதிலேயே தாயை இழந்தாள்; இப்போது, வளர்த்த தந்தையை இழந்தாள்; தனக்காகவே உறவைத் துறந்து கரம் பிடித்த கணவனையும் இழந்தாள்.....

இனி இழப்பதற்கு என்ன அவளிடம் இருக்கிறது?...உயிர்... 'உயிர்கள்' மட்டுமே!...

பைத்தியம் பிடித்த நிலையில் வீட்டில் தனியே...தனியே..தவிப்புடன் எதிர்காலம் கேள்விக் குறியாய்..அவளை வளைத்து நின்றது...

''தம்பி...தம்பி...ஸ்டெல்லா... என் தம்பி எங்களை மட்டும் விட்டுப் போகலே...உன்னையும் தவிக்க விட்டுப் போயிட்டானே..''

ஆவேசமாய் வீட்டினுள் நுழைந்த சம்சுதீனின் அக்காள், ஸ்டெல்லாவைக் கட்டிக் கொண்டு அழுதாள்....

அந்த வீடு முழுவதும் இருவரின் அழுகை ஒலியால் நிறைந்து போயின.

நீண்ட நேரத்திற்குப் பின் இருவரும் சிறிது நிதானத்திற்கு வந்தார்கள்..

ஸ்டெல்லாவே பேசினாள்..''அவுங்க அம்மா, அப்பா எப்படி இருக்காங்க...''

அப்பா கடைக்குப் போகாம இருந்ததாலே

ஒன்றும் ஆகலே...அம்மாதான்...தம்பி நிலைமையைக் கேள்விப்பட்டு, மயக்கம் போட்டு விழுந்துட்டாங்க... இப்ப பரவாயில்லை...நீ வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டு..''

''நான் எங்கே போறது..இனி எப்படி வாழ்றது?''

''நீ எங்கே போகணுமோ, அங்கேதான் கூப்பிடுறேன்...புறப்படு..''

''தயவு செய்து என்னை விட்டுடுங்க... என்னாலதான் அவுங்களுக்கு இந்த நிலை...நான் பாவி...பழிகாரி..'' அழுதாள்.

''இதோ பாரு ஸ்டெல்லா...என் தம்பி மட்டும் பலியாகலே...பல பேரு போயிட்டாங்க..இது இயற்கை...யார் என்ன செய்ய முடியும்? யாரை யார் குறை சொல்ல முடியும்?....யாரையும் ஏதும் சொல்லக் கூடாது...முடியாது...தப்பு நீ வா.. என் தம்பி இருந்த வீட்டில என் தம்பியைப் போல இனி நீ இரு...புறப்படு, வா..''

''நான் இப்ப அங்கே வந்தா, அவுங்க துன்பம், துயரம் இன்னும் அதிகமாகும். தயவு செய்து வேணாங்க...என்னை இப்படியே விட்டுடுங்க..'' என்று சொல்லி மறுத்தாள்.

''ஸ்டெல்லா...உனக்குன்னு இனியாரும் இல்ல..இனி நாங்கதான். என்னதான் இருந்தாலும் நீ என் தம்பி விரும்பி கைப்பிடிச்சப் பொண்ணு. உன்னை இனி தனியா விட முடியாது...அப்படி

விடுறதும் தர்மம் ஆகாது. நீ புறப்படு...''

''பக்குவப்பட்ட மனசு உங்களுக்கு...ரொம்ப நன்றி...அவுங்களோட அப்பா அம்மாவுக்கு என் மேல உள்ள கோபம், வெறுப்பு இந்த ஜென்மத்துல தீராது..மாறாது..நீங்க போங்க...''

''நீ நினைக்கிறது மாதிரி ஏதும் நடக்காது...எல்லாம் நல்லபடியா நடக்கும்.நீ நட'' என்று



அவள் கையைப் பிடித்தாள், சம்சுதீனின் அக்காள்.

ஒரு வழியாக மேற்கொண்டு ஏதும் சிந்திக்காமல் ஸ்டெல்லா புறப்பட்டாள்.

''மகளே...என் மகனை சாகடிச்சவளை இங்கே ஏன் அழைச்சுகிட்டு வந்தே...? போகச் சொல்லு'' என்று சத்தம் போட்டு கத்தினார், சம்சுதீனின் தந்தை.

சம்சுதீனின் தாய் ஸ்டெல்லாவையே உற்று அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

''இவளை எங்கப்பா போகச் சொல்றது'' மகள் கேட்டாள்.

''கடல்ல போய் சாகச் சொல்லு''

''அவளும் அதைத்தான் செய்ய இருந்தா.. நான்தான் தடுத்து இங்கு கூட்டி வந்தேன்.''

''மகளே, உனக்குப் பைத்தியமா?''

''ஒரு வகையிலே பைத்தியம் தானப்பா...என் தம்பி மேல..''

''நீ என்னம்மா புலம்புறே''

''வாப்பா..இவ சின்னவயசிலேயே தாயை இழந்தவ...இவளை வளர்த்த அப்பாவையும் இப்ப இழந்ததோட, கட்டின கணவனையும் இழந்துட்டு நிக்கிற...இந்த நிலையிலே நான் இவளை இழக்க விரும்பல...

ஆமாம்பா... நீங்களும் அம்மாவும் உங்க மகனை இழந்துட்டீங்க...நான்..நான்..என் தம்பியை இழக்க விரும்பல...

''மகளே, நீ என்ன சொல்றே''

''வாப்பா, என் தம்பி... என் தம்பி இவ வயித்துல மூணு மாசமா வளர்றாம்பா!..''என்றாள்.

அவ்வளவுதான், மகள் சொல்லியதைக் கேட்டு அசைவற்று அப்படியே நின்றார்.

அதுவரை அமைதியாக ஸ்டெல்லாவையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த சம்சுதீனின் தாய்..

''என் மகனே!நீ வந்துட்டியாப்பா...''என்று அழைத்தபடியே ஓடி வந்து தன் மருமகளை - ஸ்டெல்லாவை அணைத்துக் கட்டிக் கொண்டாள்.

# சுனாமி நிச்சயித்த....



"என்னங்க, மாப்பிள்ளை வீட்டுக்காரவங்க எத்தனை மணிக்கு வர்றேன்னு சொன்னாங்க...?'' கேட்டார் கோபாலின் மனைவி கோமதி.

''ஐந்து மணிக்கு வர்றேன்னாங்க. இப்ப நாலரைதானே ஆச்சு..ரயிலை, பஸ்ஸை பிடிச்சா வரப் போறாங்க? சொந்தமா கார் இருக்கு.. புறப்பட்டா கால்மணி நேரத்துலே வந்திடலாமே!... நீ டிபன் எல்லாம் ஏற்பாடு செய்திட்டியா'' கேட்டார், கோபால்.

''ஆச்சு, காபி மட்டும்தான் கலக்கணும். அவுங்க வந்ததும் கலந்தா போதும்'' என்றார் மனைவி, கோமதி.

''ம்..வனிதாவை ரெடி பண்ணிட்டியா?'' கேட்டார்.

''ம்..வனிதாவை அலங்காரம் பண்ண அவளோட தோழி சுமதி வந்திருக்கா. எல்லாம் நான்

பாத்துக்கிறேன்னு சொல்லிட்டா..''என்றார், கோமதி.

''அப்படியா..சரி நான் போய் வாசல் பக்கம் நிக்கிறேன்..'' என்றபடியே, வாசல் பக்கம் வந்து நின்றார், கோபால்.

அப்போது தெருவில் நடந்து சென்று கொண்டு இருந்த ஐயப்பன், கோபாலைப் பார்த்து அவரிடம் நடந்து வந்தார்...

''என்ன கோபால், மாப்பிள்ளை வீட்டுல இன்னைக்கு வர்றாங்கன்னு சொன்னியே வந்துட்டுப் போயிட்டாங்களா?'' என்று கேட்டார், ஐயப்பன்.

''ஐந்து மணிக்கு வர்றேன்னு சொன்னாங்க. அதான் எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்.'' என்றார் கிழக்கு முகமாக வீதியைப் பார்த்துக் கொண்டே கோபால்.

''இந்தப் பொண்ணுக்கும் நல்லபடியா கல்யாணம் முடிஞ்சிடுச்சுன்னா, உன் கடமை தீர்ந்திடும்...வேலையிலே சர்வீஸ் இன்னும் எத்தனை வருஷம் இருக்கு?'' கேட்டார், ஐயப்பன்.

''இன்னும் இரண்டு வருஷம் இருக்கு..'' என்றார் கோபால்.

''கூடவோ, குறைச்சலோ கல்யாணத்தைப் பாத்து முடிச்சுட்டு, நிம்மதியா இரு. நான் கடை வரைக்கும் போயிட்டு வர்றேன்..'' என்று சொன்னார்.

''சரி ஐயப்பா, போயிட்டு வா..''என்று

கோபால் சொன்னதும், கோபாலின் நண்பரான ஐயப்பன் அங்கிருந்து நடந்து போனார்.

அதே நேரம் காரின் ஒலி கேட்டு தெருவைத் திரும்பப் பார்த்தார் கோபால்.

மெல்ல ஒரு கார் தவழ்ந்து வந்து கொண்டு இருந்தது...

வந்த கார் கோபாலின் வீட்டின் முன்னே ஓரம் கட்டி நின்றது.

மாப்பிள்ளை வீட்டார்தான்....

கோபால் மகிழ்ச்சியோடு வாயிற்படியில் இறங்கி எதிர் கொண்டு வரவேற்க சென்றார்.

அதற்குள், மாடியறையில் அலங்காரம் செய்து கொண்டு இருந்த சுமதி, கார் கதவு திறக்கும் சப்தம் கேட்டு அங்கிருந்து மெல்ல எட்டிப் பார்த்தாள்.

காரில் இருந்து, இரண்டு வயது முதிர்ந்த தம்பதியினரும், ஸ்மார்ட்டாக ஒரு இளைஞனும் இறங்கினார்கள்.

பார்த்தாள் சுமதி....இவர்தான் மாப்பிள் ளையோ!..ரொம்ப அழகா, உயரமா இருக்கிறாரே...

அறைக்குத் திரும்பினாள்.

''எங்கடிப் போன?'' கேட்டாள், வனிதா.

''உன் எதிர்கால கணவரைப் பார்க்க..''

''என்னடி சொல்றே''

அவுங்க எல்லாம் வந்துட்டாங்கடி... உன்னவர் ஸ்மார்ட்டா ஜம்முன்னு இருக்கார். நீ அதிர்ஷ்டசாலி தாண்டி..''என்றாள், சுமதி.

வனிதாவின் அலங்கார முகத்தில் நச்சென்று நாணம் வந்து ஒட்டிக்கொண்டது.

மெல்ல தலை குனிந்தபடியே கேட்டாள்...

''உண்மையாகவா?.''

''நீயே இன்னும் கொஞ்சநேரத்திலே பார்க்கப் போறீயே, பாத்துக்கடி..'' என்று சிரித்தாள் சுமதி.

ஒரு சின்னக் கனவில் தன்னை மறந்தாள், வனிதா....

''என்னடி...சிந்தனை சிறகடிக்குதோ?.. இதோ பாருடி...அலங்காரம் போதும்...அற்புதமா இருக்கே...? உன்னைப் பார்த்து அசந்து போகப் போறாங்க..இன்னும் கொஞ்ச நேரத்துல உங்க அம்மா வருவாங்க...அதுக்குள்ள நீ டிரஸ்ஸை மட்டும் சேஞ்சு பண்ணிக்க, மத்தது எல்லாம் ஓகே..'' என்று கன்னத்தைத் தட்டினாள், சுமதி...

''வணக்கம், வாங்க..''என்று வணங்கி வரவேற்றார், கோபால்.

''வணக்கம்..''என்ற படியே வந்தவர்களும் வணங்க..எல்லோரும் வீட்டினுள் நுழைந்தனர்.

வனிதாவின் அம்மா அவர்கள் உள்ளே வந்து நுழைந்ததும், ''வாங்க...இருங்க..'' என்றார்.

எல்லோரும் அமர்ந்தார்கள்.

''உங்க நண்பர் கேசவன் சொன்னார். உங்களைப் பற்றியும், உங்கள் குடும்பத்தைப் பற்றியும். அதனால்தான், வந்தோம்'' என்றார் பெண்

பார்க்க வந்த, பரமசிவம்.

''நல்லது. இவங்க என் மனைவி, கோமதி. எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைங்க. மூத்தப் பெண்ணிற்கு சென்ற ஆண்டு திருமணம் முடிந்து, அமெரிக்காவிலே செட்டிலாயிட்டா. இரண்டாவது பெண் வனிதா. பி.ஏ. முடிச்சுட்டு கம்யூட்டர் கிளாசுக்குப் போயிகிட்டு இருக்கா.''

''இவ என் மனைவி, மரகதம். எங்களுக்கு இவன் ஒரே மகன், படிப்பு பள்ளி இறுதி வகுப்போட நிறுத்திட்டு, வியாபாரத்துல ஈடுபட்டிருக்கான்.

எங்களுக்கு சொந்தமா ஆறு மீன்பிடி போட்டு இருக்கு. சையிடுலே மீன் ஏற்றுமதியும் நடக்குது...

மூணு வீடு இருக்கு. இரண்டு வீட்டை வாடகைக்குப் போட்டு இருக்கோம். எனக்கொரு காரும், என் மகனுக்கொரு காரும் இருக்கு. எங்க கம்பெனியிலேயும், வீட்டிலேயும் பதினெட்டு ஆளுங்க வேலை செய்றாங்க.

''ரொம்ப நல்லது..'' என்றார், கோபால்.

''டிபன் சாப்பிட்டு, அப்புறம் பேசலாங்களா..'' என்று கோபாலின் மனைவி கேட்டார்.

''வந்த வேலையை முதல்ல முடிக்கலாமே.'' என்றார், பரமசிவம்.

டிபனை முடிச்சுட்டு அப்புறம் வந்து என்ன பேசனுமோ பேசிக் கலந்துக்கலாம். வாங்க..'' என்று கோபாலும் அழைத்ததால், ஒருவரை ஒருவர்

பார்த்தபடியே எழுந்து சென்றார்கள்.

சாப்பிட்டு வந்து அமர்ந்தார்கள்...

''கோமதி, வனிதாவை அழைச்சிகிட்டு வா.''என்று குரல் கொடுத்ததும்

காபி டம்ளர்களோடு அங்கே வந்தாள், வனிதா.

நாணத்தோடு வந்த அவள் மூவருக்கும் காபியைக் கொடுத்துச் சென்றாள்.

பெற்றோர்கள், மகனைப் பார்த்தார்கள்.

அவன் கூச்சத்தோடு அவர்களைப் பார்த்து புன்னகைத்தான்.

அருகில் அமர்ந்திருந்த தாய், மெல்ல அவனிடம் கேட்டார். ''என்னப்பா, பொண்ணைப் பிடிச்சு இருக்கா?..''

''ரொம்பப் பிடிச்சு இருக்கு..''

அதைக் கேட்டுத் தாய் சிரித்தார். அதைத் தொடர்ந்து, அவன் தந்தையும் சிரித்தார்.

''இதோ பாருங்க கோபால், உங்கப் பெண்ணை எங்களுக்குப் பிடிச்சிருக்கு. எங்கப் பையனுக்கு ரொம்பவே பிடிச்சு இருக்கு'' என்றார், பரமசிவம்.

அவர்களின் முடிவைக் கேட்டதும், அறையினுள் இருந்த சுமதி, 'இச்' சென்று அவள் கன்னத்தில் முத்தம் பதித்தாள். வனிதா மகிழ்ச்சியில் முகம் சிவந்து போனாள்.

''மேற்கொண்டு பேச வேண்டியதை

பேசிடுலாமே..'' என்றார் பரமசிவத்தின் மனைவி.

''அதுவும் சரிதான்,'' என்றார், கோபால்.

''இதோ பாருங்க கோபால். சுத்தி வளைச்சுப் பேச விரும்பாதவன் நான், வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசுறவன்.''

''அது நல்லது தானுங்களே..''என்றார், கோபால்.

''என் பையனுக்கு இதோட ஆறு பெண் பார்த்திட்டோம். அதுல இவனுக்குப் பல பெண்களைப் பிடிக்கலே. பிடித்த சில பெண்களுக்கு நாங்கள் எதிர்பார்த்தபடி அவர்கள் ஒத்து வர்ல..அதனால விட்டுவிட்டோம்'' என்றார்.

''நீங்க கொஞ்சம் விளக்கமா சொன்னா நல்லா இருக்கும்.'' என்றார், கோபால்.

''அதுவும் சரிதான்..உங்க பொண்ணுக்கு ஐம்பது பவுன் நகை போட்டுடுங்க. கையிலே ரொக்கமா பத்து இலட்சம் கொடுத்திடுங்க. எங்ககிட்டே கார் ரெண்டு இருக்கு. இருந்தாலும் நீங்க ஒரு பைக் வாங்கிக் கொடுத்திடுங்க.

மாப்பிள்ளையோட டிரஸுக்குன்னு ஒரு இருபத்தைந்தாயிரம் கொடுத்திடுங்க..கல்யாணத்தை உங்க செலவிலேயே ஒரு பெரிய மண்டபத்திலே வச்சுடுங்க...எங்களுக்கு சொந்த பந்தமுன்னு ஏகக் கூட்டம். அவ்வளவுதான்..'' என்று பேசி முடித்தார், பரமசிவம்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்த

கோபாலும் அவர் மனைவியும், சிலையாகி நின்றிருந்த வேளையில்...

''அவுங்க சொல்ல மறந்துட்டாங்க... ஒரு அஞ்சு பவுனுல எங்க மகனுக்கு கழுத்துச் செயினும், பிரேஸ்லெட் அஞ்சு பவுனுலேயும் போட்டுடுங்க... அவ்வளவுதான்..'' என்றார், பரமசிவத்தின் மனைவி.

அதைக் கேட்டதும், மேலும் சிலையாகி நின்று போனார்கள்.

அவர்கள் எந்தப் பதிலும் சொல்லாமல் நின்றிருப்பதைக் கண்ட பரமசிவம் கேட்டார்.

''அப்புறம் என்னா? நாங்க சொல்ல வேண்டியதை..நீங்கள் செய்ய வேண்டியதை சொல்லிட்டோம். நாங்க புறப்படலாமா?''

''நாங்களும் கொஞ்சம் பேசலாங்களா'' கேட்டார், கோபால்.

''தாராளமாகப் பேசுங்க... அதுதானே முறை..'' என்றார் பரமசிவம்.

எங்களுக்கு இரண்டு பொண்ணுங்க மட்டும்தான். இதிலே, ஐந்து இலட்சம் செலவு பண்ணி பெரிய பொண்ணக் கட்டிக் கொடுத்திட்டோம்.

எங்களுக்குப் பின்னே இந்த வீடு, எனக்கு வரும் பென்ஷன் பணம் எல்லாம் எங்க பொண்ணுங்களுக்குத்தான்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

''அந்த பேச்செல்லாம் இப்ப எதுக்குங்க?

இப்ப இந்தப் பொண்ணுக்கு செய்ய வேண்டியதைப் பத்தி மேலே பேசுங்க..என்றார் பரமசிவம்.

''சரி, இப்ப எங்க நிலையிலே நீங்க கேட்ட அளவிலே செய்ய முடியாதுங்க..''

''அப்படின்னா..எவ்வளவுதான் செய்வீங்க?'' பரமசிவத்தின் மனைவி கேட்டார்.

''இருபது பவுன் போட்டு ரொக்கமா பத்து இலட்சம் கொடுக்கிறோம்.

மாப்பிள்ளைக்கு மூணு பவுனிலே கழுத்துச் சங்கிலியும், பிரஸ்லெட்டு மூணு பவுனிலேயும் போடுறோம். கல்யாணச் செலவை இரண்டு பேருமே சமபங்கிட்டுக்குவோம்..'' என்று தன் நிலையை விளக்கிச் சொன்னார், கோபால்.

''ஆமாங்க...இதுல எந்த குறையும் வராம செய்துடுறோம்..'' என்றார் கோபாலின் மனைவியும்.

''இதோ பாருங்க..உங்க லிஸ்ட்டு போல எத்தனையோ பேர் சொல்லிட்டாங்க...அதெல்லாம் வேண்டான்னுதான் இங்க வந்தோம். இங்கேயும் அப்படித்தான் இருக்கு. நாங்க கிளம்ப வேண்டியதுதான்.''

அதே நேரத்தில்...

இதுவரை இவர்கள் பேசியதை எல்லாம் கேட்டுக் கொண்டு அறையிலிருந்த மகள் அழைப்பைக் கேட்டு..

''கொஞ்சம் இருங்க..''என்று சொல்லி, அறையினுள் நுழைந்தார்,கோபால்; அவரைத்



தொடர்ந்து மனைவியும் நுழைந்தார்.

''என்னம்மா...''

''அப்பா..இந்தப் பகல் கொள்ளைக்காரர்கள் வீட்டுக்கு மருமகளாகப் போக நான் விரும்பல... உடனே அவுங்களைப் போகச் சொல்லுங்க.'' என்றாள் ஒரு முடிவோடு.

''நீ என்னாம்மா சொல்றே...?'' தாய் கேட்டார்.

''அம்மா, இதுக்கு மேலே நான் எதுவும் பேச விரும்பல...என் கல்யாணத்தைப் பத்தி இப்ப பேசவும் விரும்பல. தயவு செய்து அவங்களை வீட்டை விட்டுப் போகச் சொல்லுங்க..'' என்று கொஞ்சம் சத்தம் போட்டே கத்திவிட்டாள், வனிதா.

மகள் சொன்னதிலும் நியாயம் இருப்பதை உணர்ந்த பெற்றோர்கள், வெளியே வந்தார்கள்.

''உங்க மகள் என்ன சொல்லுச்சு?'' பரமசிவத்தின் மனைவி கேட்டார்.

''எங்க மகள் சொன்னதை எல்லாம் நாங்க உங்க கிட்ட சொல்ல முடியாத நிலையிலே இருக்கோம். நீங்க எங்களைவிட பெரிய இடமா பாருங்க'' என்றார், கோபால்.

''எங்க மகனுக்கு என்ன, ராஜா...எங்க போய் பொண்ணு கேட்டாலும் நான், நீன்னு போட்டி போட்டு கிட்டு வந்து கியூவிலே நிப்பாங்க..நீங்க புறப்படுங்க...ராஜா ஏம்பா உட்கார்ந்து இருக்கே...? கிளம்பு...''

அவன் உள்ளம் உடைந்து போனது.

வனிதாவின் அழகு அவனுள் நிழலாடியது. வந்த மூவரும் வெளியேறினார்கள்.

ஆழிப்பேரலையால் ஊரே புண்ணாகிக் கிடந்தது.

தஞ்சமென்றும், பஞ்சமென்றும் எங்கும் மனிதக் கூட்டம்.

சுனாமி, கடலுக்குள் சுருட்டிக் கொண்டு போனவர்களையும், காணாமல் போனவர்களையும் தேடி, பலர் நடமாடும் பிணங்களாக அங்கே உலவிக் கொண்டிருந்தார்கள்.

ஒரே நாளில்

இல்லை...ஒரு சில மணிநேரத்தில், சுனாமி மாடி வீடுகளை இடித்துப் போட்டுவிட்டது; குடிசைகளை கண்ணில் காணாமல் ஆக்கி விட்டது;

கூடு இழந்தப் பறவைகளைப் போல் மனிதர்களை தவிக்க விட்டு விட்டது.

அரசு ஏற்பாடு செய்திருந்த இடங்களில் பலர் தஞ்சமடைந்தார்கள். அதில் பரமசிவத்தின் குடும்பமும் அடக்கம்.

ஒரே நாளில் இடிந்துபோன மண்சுவராக காட்சி தந்து கொண்டு இருந்தார், பரமசிவம். அவர் மனைவியும், மகனும் அப்படியே..

கோபாலின் குடும்பம், தங்கள் உறவினர் ஒருவர் நடந்த கொடுமையில் காணாமல் போனதால் தேடிக் கொண்டு, அங்கே வந்தார்கள்.

பரமசிவம்தான் அவர்களை முதலில் பார்த்தார். அவர்களை மேலும் பார்க்க இயலா தவராய் தலை குனிந்து கொண்டார்.

உறவினரைத் தேடி ஒவ்வொரு இடமாக பார்த்துக் கொண்டு வந்தவர்களின் கண்ணில் பரமசிவம் தட்டுப்பட்டார்.

தடுமாறிப் போனார்கள் கோபாலும், அவர் மனைவி, மகளும்.

''என்ன ஆச்சு...?'' பதறியபடியே அவரை நோக்கி ஓடினார், கோபால்.

''நேற்றுவரைக்கும் எங்ககிட்ட இருந்த சொத்து, சுகம், ஆணவம் எல்லாம்..எல்லாமும் அழிஞ்சு போச்சு..'' என்று கூறும்போதே அழத் தொடங்கிவிட்டார், பரமசிவம். மனைவியும் அவரோடு சேர்ந்து கொண்டார்.

''ஏன் இங்கே வந்தீங்க...?வாங்க நம்ம வீட்டுக்கு..''அன்போடு அழைத்தார், கோபால்.

கோபாலின் அழைப்பைக் கேட்டதும், ஆடிப் போனார்கள் அவர்கள். என்ன மனிதர் இவர்.!

''உறவினர் வீட்டுக்குக் கூட போக விரும்பாமதானே இங்கே வந்தோம். இப்படியே இருக்கோம்..''என்றார் பரமசிவம்.

''நீங்க அப்படி எல்லாம் சொல்லக் கூடாது...எங்க வீட்டுக்கு நீங்க வரலாம், தப்பே இல்லை. எங்களுக்கு நீங்க உறவு இல்ல. சராசரி மனிதர்கள் நாங்க.'' என்று கோபாலின் மனைவி அழைத்தார்.

அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டு தலைகுனிந்து அமர்ந்து இருந்தான், அவர்கள் மகன்.

''நடந்ததைப் பற்றி எல்லாம் மனசிலே வச்சிக்காதிங்க. புறப்படுங்கள்...!''என்றாள் கனிவாக, வனிதா.

அவளது வார்த்தைகளாலும், மேலும் அவர்கள் மனதால் உடைந்து போனார்கள்.

''எதைப் பற்றியும் கவலைப்படாதீங்க... எல்லாம் இனி நல்லதே நடக்கும், வாங்கப் போகலாம்..''என்று ஆதரவோடு, பரமசிவத்தின் கையைப் பிடித்துத் தூக்கினார், கோபால்.

அவர் மனைவியை கோபாலின் மனைவி அணைத்துக் கொண்டார்.

''ம்...வாங்கப் போகலாம்..''என்று வனிதா அழைத்ததும்

பரமசிவமும், அவர் மனைவியும் தங்கள் மகனைப் பார்த்தார்கள். வனிதாவையும் பார்த் தார்கள்.

அமர்ந்திருந்தவன் எழுந்தான்...

வனிதாவின் அருகில் சென்றான்...

அவர்கள் இருவரும் முன்னே செல்ல, அவர்கள் பெற்றோர்கள் நால்வரும் பின் தொடர்ந்து சென்றார்கள்.

—



நூலாசிரியரைப் பற்றி....

பெயர்:பாபநாசம் குறள்பித்தன்

பெற்றோர்: தனம்வெங்கிடாசலம்

பிறப்பு: 19.07.1946

படிப்பு: புலவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்

- 1965இல் முதன் முதலில் சுதேசமித்திரமினில் எழுத்து தொடக்கம்
- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்தி வந்த 'தாய்' வார இதழில் துணையாசிரியராக 10 ஆண்டுகள் பணி

எழுதி வெளிவந்த நூல்கள்:

சிறுவர் நூல்கள் 23/ கவிதை நூல்கள் 5

நாடகங்கள் 5/ ஆன்மிகம் 7

பல்துறை நூல்கள் 28

பெற்ற விருதுகள்:

விஜிபி விருது 1984

மனித நேய அறக்கட்டளை விருது 2001

திருப்பூர் தமிழ்ச் சங்க விருது 2002

தமிழக அரசு விருது 2002

வெளியீடு:

அமைதி அறக்கட்டளை, திண்டுக்கல்